வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu





Email : news@eelanadu.lk | மலர் : 01 | 24.11.2021 புதன்கிழமை | இதழ் : 354 | பக்கங்கள் : 16


# ஆற்றில் 'படகு பாதை' கவிழ்ந்ததில் மாணவர்கள் உட்பட 10 பேர் மரணம்!

## திருமலையில் நேற்று பெரும் சோகம்! கிண்ணியாவில் வெடித்தது வன்முறை



திருகோணமலை, நவம்பர் 24

கிண்ணியா - குறிஞ்சாகேணியில் ஆற்றில் பயணித்த படகு பாதை கவிழ்ந்ததில் சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். முன்பள்ளி சிறார்கள் உட்பட 8 மாணவர்களும், முன்பள்ளி ஆசிரியை ஒருவரும், முதியவர் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்தனர் என்று தெரிய வந்துள்ளது.

15

## கிண்ணியா சம்பவம் மனித படுகொலை சம்பந்தப்பட்டோர்மீது சட்ட நடவடிக்கை

### நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன்

*கொழும்பு. நவ. 24*

கிண்ணியா படகுப் பாதை விபத்துச் சம்பவத்தை மனித படுகொலைகளாகவே கருதுவதாகவும், இதனால் இந்த படகுப் பாதையை

15

## மாவீரர் தின அஞ்சலிக்கு இடம் வழங்க மறுத்தார் வல்வை நகரசபை தலைவர்!

*யாழ்ப்பாணம், நவ. 24*

தீருவில் பொதுப் பூங்காவில் மாவீரர் தின நிகழ்வு நடாத்துவதற்கு வல்வெட்டித்துறை நகரசபையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தீருவில் பொதுப் பூங்காவில் நிகழ்வை நடத்து

15

# அதிகாரப் பகிர்வும் கிடைக்காது புதிய அரசமைப்பும் உருவாகாது

## காணி அற்றவர்களாக தமிழரை மாற்றவே காணி அபகரிப்பு ஐ.நா. உயர் அதிகாரியிடம் நேற்று முறையிட்ட கூட்டமைப்பு

கொழும்பு, நவ. 24

"ஒரு நாடு ஒரு சட்டம் என்பதன்மூலம் அதிகாரப் பகிர்வுக்கு தாம் தயாராக இல்லை என்பதில் சிங்களத் தலைவர்கள் உறுதியாக உள்ளனர்", என்று இலங்கை வந்துள்ள ஐ. நா. மத்திய கிழக்கு, ஆசியா, மற்றும் பசுபிக் நாடுகளுக்கான அரசியல் விவகாரங்களுக்கான உதவிப் பொதுச்செயலாளர் காலித் கியாரியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

15

## நினைவேந்தலுக்கு தடைபோடும் மனு: ஊர்காவற்றுறை நீதிமன்றமும் தள்ளுபடி

*யாழ்ப்பாணம், நவ. 24*

மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை உத்தரவு கோரி ஊர்காவற்துறைப் பொலிஸாரால் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் நேற்று நிரா

15

## சப்பாத்துக் கால்களால் துயிலும் இல்லங்களை நீங்கள் மிதிக்கும்வரை நல்லிணக்கம் ஏற்படாது

### பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார் சிறிதரன்

*கொழும்பு, நவ. 24*

இறந்து போன அந்த ஆத்மாக்களின் துயிலும் இல்லங்கள் மேலே நீங்கள் சப்பாத்துக்கால்களால் மிதிக்கும்வரை இந்த நாட்டில் அமைதி, சமாதானம், நல்லிணக்கம் ஏற்படப்போவ

15

## காப்பகத்தில் 36 சிறுமிகளுக்கு கொரோனா உறுதி!

*கொழும்பு, நவ. 24*

குளியாப்பிட்டி நீதிமன்றத்தின் கீழ் செயற்படும் சிறுவர் காப்பகத்தில் 36 சிறுமிகளுக்குக் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரிகள் நேற்று குறித்த வளாகத்திற்குச் சென்று கொரோனா அறிகுறிகளுடன் காணப்பட்ட 46 சிறுமிகளுக்கு

15

## புதிய அரசமைப்பு வரைவில் இரகசியம் எதுவும் இல்லை!

### பாராளுமன்றில் அது சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் என்கின்றார் பிரதமர்



*கொழும்பு, நவ. 24*

புதிய அரசியலமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதில் எவ்வித இரகசியமான விடயங்களும் இல்லை எனவும் தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்

15




## அதிகாரப் பகிர்வும்...

காலித் கியாரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று மாலை நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் குழுவின் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராஜா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கரும் கலந்துகொண்டார். ஒரு மணி நேரத்துக்கு இச்சந்திப்பு நீண்டிருந்தது. இதன்போது புதிய அரசியலமைப்பு உருவாக்கம், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் நிலை, தமிழர்களின் காணி ஆக்கிரமிப்பு, ஜெனிவா தீர்மானம் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன. இலங்கையில் காணப்படும் நிலைமைகள் தொடர்பாக காலித் கியாரி எழுப்பிய சந்தேகங்களுக்கு சம்பந்தன் விளக்கமளித்தார்.

“போர் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில் தமிழ் மக்களுடைய காணிகள் பல்வேறு விதமாக சுவீகரிக்கப்படுகின்றது. வனவளத் திணைக்களம் மூலமாக, மகாவலி திட்டம் என பல்வேறு விதமாக தமிழ் மக்களுடைய காணிகள் அபகரிக்கப்படுகின்றன” எனத் தெரிவித்த சம்பந்தன், “இதன் மூலமாக தமிழ் மக்களை காணி இல்லாதவர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்தியாவுக்கு அகதிகளாகக் குடிபெயர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் திரும்பி வர முடியாமல் உள்ளனர். அவர்கள் திரும்பிவந்தாலும், குடியிருப்பதற்கு காணி இல்லாத நிலைமை இதன் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது” எனச் சுட்டிக் காட்டினார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த தீர்மானம் வரப்போகின்றது என்றவுடன் தமிழ் மக்கள் மத்தியில் அது ஒரு ஆர்வத்தை நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. ஆனால், இவ்விடயத்தில் எதுவும் நடைபெறாமலிருப்பது மக்களுக்கு கடும் அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் கொடுப்பதாகவும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினார்கள். “குறைந்த பட்சம் தீர்மனத்தில் உள்ள அம்சங்கள் - குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீங்குவது போன்றவற்றிற்காவது அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்” என வலியுறுத்திய கூட்டமைப்பினர், அண்மையில் கூட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்தும் தெரியப்படுத்தினார்கள். அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றது. ஆதனால் இவ்விடயத்தில் அரசின் மீது அழுத்தம் கொடுப்பது ஐ.நா.வின் பொறுப்பு எனவும் கூட்டமைப்பினர் குறிப்பிட்டார்கள்.

புதிய அரசியலமைப்பு, ஒரு நாடு ஒரு சட்டம் என்ற அரசாங்கத்தின் கொள்கை தொடர்பாக ஐ.நா. அதிகாரி கேள்வி எழுப்பிய போது பதிலளித்த சம்பந்தன், ஒரு நாடு ஒரு சட்டம் என்பதன் மூலம், அதிகாரப் பகிர்வுக்கு தாம் தயாராக இல்லை என்பதைத்தான் அரசாங்கம் சொல்ல முற்படுகின்றது. அதேவேளை, சிங்களத் தலைவர்கள் யாரும் அதிகாரப் பகிர்வுக்குத் தயாராக இல்லை. ஒரு நாடு ஒரு சட்டம் என்பதன் மூலமாகவும் அரசாங்கம் இதனைத்தான் சொல்ல முற்படுகின்றது. புதிய அரசியலமைப்பு ஒன்று வரப்போவதில்லை. அவ்வாறு வந்தாலும் அது கடுமையான சிங்கள பௌத்த நிலைப்பாட்டில் உள்ள அரசியலமைப்பாகவே இருக்கும் எனத் தெரிவித்தார்.

இங்குள்ள நிலைமைகள் குறித்து தமக்கு பெருமளவுக்குத் தெரியும் எனவும், தினசரி இது தொடர்பான தகவல்கள் தமக்கு கிடைப்பதாகவும் தெரிவித்த ஐ.நா. பிரதிநிதி, இவ்விடயங்கள் தொடர்பில் தாம் கவனத்திற்கொண்டு, உரிய செயன்முறைகளை முன்னெடுப்பதாகவும் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

## சப்பாத்துக்...

தில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் உங்கள் இனவாதத்தை முதலில் தூக்கி வெளியே போடுங்கள். எமது மக்கள் இழந்த தமது உறவுகளை நினைவுகூர அனுமதி கொடுங்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யான எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழர்களின் பிரதேசங்களில் யுத்த காலத்தில் தமது உயிர்களை தியாகம் செய்த தமது குழந்தைகள், மாவீரர்களை அந்த மக்கள் நினைவு கொண்டு விடுவார்கள் என்பதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்கள் முன்பாகவும் குவிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களின் மனங்களில் கலாசார ரீதியாக, பண்பாட்டு ரீதியாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்ற தமது வீரப் புதல்வர்களை மறக்கக்கூடியதொரு சூழல் வருமா? அல்லது சிங்கள மக்கள் இதனை விரும்புகின்றார்களா?

2016, 2017, 2018, 2019களில் கூட, இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 இல் ஜனதிபதியாகப் பதவியேற்ற பின்னரும்கூட எமது மக்கள் மிகவும் அமைதியாக மாவீரர் தினத்தை அனுஷ்டித்தார்கள். எந்த இடைஞ்சலும் இந்த நாட்டில் ஏற்படவில்லை. இங்கே பல அமைச்சர்கள் விழாக்களை நடத்துகின்றார்கள். விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்றன. இதற்கெல்லாம் எந்தக் கொரோனாவும் இல்லை. ஆனால், மாவீரர் துயிலும் இல்லங்களுக்குள் மட்டும்தான் கொரோனா வருமென அந்த இடங்களில் இராணுவம்,பொலிஸாரை குவித்து அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுகின்றது. யுத்த பிரேதேசங்கள் போன்று இன்று வடக்கும் கிழக்கும் உள்ளன.

தயவு செய்து இந்த நிலைகளை மாற்றுங்கள், முதலில் புரிந்துணர்வு வேண்டும். நாட்டில் ஓர் இணக்கப்பாடு வேண்டும் என்றால் மக்கள் மனங்களை வெல்ல வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் எமது பிள்ளைகளை இழந்துள்ளோம். ஆகவே நாம் எமது பிள்ளைகளை நினைக்கின்ற வணக்க முறைகளை நீங்கள் தடுப்பதன் மூலம் நீங்கள் எதனை அடையப்போகின்றீர்கள். அன்புக்குரிய சிங்கள மக்கள்கூட இதன் எதிர்க்கவில்லையே?

இந்த நாட்டிலே அரசியல் தேவைக்காக ஜனாதிபதியிலிருந்து அமைச்சர்கள்வரை தங்களின் அரசியல் தேவைக்கவே இதனை செய்கின்றார்கள் என்ற விடயம் இப்போது தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே இதிலிருந்து மாறுங்கள்.

மாவீரர்கள் புதைக்கப்பட்டிருக்கும் துயிலுமில்லங்களில் எல்லாம் இராணுவத்தினர் முகாம் அமைத்து சப்பாத்துக் கால்களுடன் பந்து விளையாடுகின்றார்கள். உங்களுடைய ஒரு குழந்தை அல்லது உங்களுடைய ஒரு சிங்கள வீரன் புதைக்கப்பட்ட இடத்தில் தமிழ் இராணுவத்தை சேர்ந்தவர்கள் இவ்வாறு நடந்தால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதை நீங்கள் இந்த நாட்டின் தலைவராக, தந்தையாக, இந்த நாட்டிடை சீரமைக்க நினைக்கின்ற ஒரு மனிதனாக நினைத்துப் பாருங்கள். இதே நிலையில் தான் இந்த நாட்டில் உள்ள ஏனைய இனங்களின் மனநிலையும் என்பதனை புரிந்து கொண்டால் இந்த நாட்டில் நல்லிணக்கம் என்பது மிக இலகுவாக ஏற்படுத்தக்கூடியது -என்றார்.

## நினைவேந்தலுக்குத்...

கரிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்துறை தொகுதி கிளை செயலாளர் கருணாகரன் நாவலன், தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிப முன்னணியின் செயலாளர் கருணாகரன் குணாளன், ஊர்காவற்துறை பிரதேச சபை உறுப்பினர் அம்பலம் கனகையா , ஊர்காவற்துறை தொகுதி கிளையின் நிர்வாகக் கிளை உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிக்ற் (சின்னமணி), ரமேஷ் றமில்டன், ருத்ரன் (நெடுந்தீவு) ஆகியோருக்கு ஊர்காவற்துறைப் பொலிஸாரால் வழங்கப்பட்டிருந்த உத்தரவுக்கிணங்க அத்தரப்பினர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இவர்கள் சார்பாக மூத்த சட்டத்தரணி நல்லையா சிறீகாந்தா ஆஜராகி ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வாதங்களை முன்வைத்திருந்தார். அவரோடு இணைந்து சட்டத்தரணி அருட்பிரகாசம் நிரோஷன், சட்டத்தரணி சுகாஷ், சட்டத்தரணி ஷாலினி ஆகியோரும் ஆஜராகியிருந்தனர். (இ - 03)

## கிண்ணியா சம்பவம்...

நடத்தியவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

படகுப் பாதை விபத்துச் சம்பவம் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், படகுப் பாதை கவிழ்ந்து விபத்தால் ஏற்பட்ட உயிரிழப்புக்கு ஆழ்ந்த கவலையை அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இந்தப் பிரச்னையையும் அரசாங்கத்தின்மீது சுமத்துவதற்கே முயற்சிக்கின்றனர். இந்த பாலத்திற்கான அடிக்கல் நல்லாட்சி அரசாங்கத்தாலேயே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடுகள் செய்யப்படாதும் மற்றும் கேள்வி மனுக்கோரல்கள் இன்றியும் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது.

ஆனால், எங்களின் அரசாங்கம் வந்த பின்னர் கேள்வி மனுக்கோரலை மேற்கொண்டு இந்த பாலத்தை விரைவில் அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தோம்.

இந்த பாலத்தை அமைக்கும் போது, குறுக்குப் பாதையொன்றும் இந்த மக்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பாதை 3 கிலோ மீற்றர் தூரத்தை கொண்டது. அந்த பாதையை மக்கள் பயன்படுத்த விரும்பியிருக்கவில்லை.

இந்நிலையில், படகுப் பாதையை நடத்தும் பொறுப்பு நகர சபைக்கே வழங்கப்பட்டது. இது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் முஸ்லிம் காங்கிரஸூக்கு உரியது. அவர்களே, படகுப் பாதை சேவைக்கு அனுமதி வழங்கினர். இந்த சேவையை நாங்கள் வழங்கியதாக அர்த்தப்படுத்த வேண்டாம்.

இதில் சிறுவர்களை அழைத்துச் செல்லும் போது உயிர்காப்பு அங்கிகளை அணிந்திருக்கவில்லை என்றே பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சட்டத்தை செயல்படுத்துமாறு கூறியுள்ளேன். எவ்வாறாயினும் நாட்டின் சட்டத்திற் கமைய இது மனித கொலையே, இதனை அரசியலுக்குள் கொண்டு செல்ல வேண் டாம். இதனை கண்டிக்கின்றோம் - என்றார்.

## மாவீரர் தின...

வதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் அனுமதி கோரப்பட்டது.

27ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை மாவீரர்தின நிகழ்வை நடத்த அனுமதி கோரி, நேற்று வல்வெட்டித்துறை நகரசபைக்கு அவர் கடிதம் வழங்கினார்.

வல்வெட்டித்துறை நகரசபை அனுமதி வழங்கியதும், நிகழ்வுக்கான அனுமதியை பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியிடம் பெறுவதாகவும் எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

இந்த கடிதம் வழங்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, நேற்று முன்தினம் பதில் கடிதம், நகரசபை தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டது.

அதில், வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தலின் படி, நிகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாதென குறிப்பிட்டுள்ளார். (அ)

## புதிய அரசமைப்பு...

பித்து விவாதம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் சார்பிலான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி நாட்டிற்கு தேவை. இந்த கடினமான சூழ்நிலையில் அம்மக்கள் மீண்டெழக் கூடியதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

எதிர்க்கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் விமர்சனங்களுக்கு நாங்கள் உன்னிப்பாகக் செவிமடுத்தோம். சில விமர்சனங்கள் நியாயமற்றவை. சில விமர்சனங்களில் ஏதேனும் நியாயம் இருப்பின், அவற்றை நாம் ஏற்று திருத்திக் கொள்ள எந்நேரத்திலும் தயாராக உள்ளோம் .

புதிய அரசமைப்பு வரைவைத் தயாரித்து வருகிறோம். அதனை பாராளுமன்ற உறுப்பி னர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து விவா திப்போம் என்பதை நினைவூட்டுகிறேன். எனவே, இந்த விவகாரத்தில் இரகசியமாக எதையும் செய்ய மாட்டோம் என்பதை யும் கூறிக்கொள்கின்றேன் - என்றார்.

## ஆற்றில் படகு...

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் பாடசாலைக்கு மாணவர்கள் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது,

குறிஞ்சாகேணியை கிண்ணியாவுடன் இணைக்கும் பழைய மரப்பாலத்தை அகற்றிவிட்டு புதிய பாலம் ஒன்று நிர்மாணிக்கப்படுகின்றது. இதனால், ஆற்றைக் கடப்பதற்காக படகு பாதை இயக்கப்படுகின்றது.

படகு பாதையும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டிருந்தபோதும், இதனைப் பயன்படுத்தியே தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் பயணித்து வந்தனர். இந்த நிலையில், நேற்றுக் காலை 30 பேர் வரையானோர் படகு பாதையில் பயணித்திருந்தனர்.

இதில் முன்பள்ளி சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பெரியவர்கள் எனப் பல வயதினர் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென பாதை கவிழ்ந்தது. இதனால், அதிலிருந்தவர்கள் ஆற்றில் மூழ்கினர்.

நீச்சல் தெரிந்த சிலர் நீந்திக் கரையேறினர். ஆனால், நீச்சில் தெரியாதவர்களும், சிறுவர்களும் ஆற்றில் மூழ்கினர். உடனடியாக அந்தப் பகுதி மக்கள் மீட்பு நடவடிக்கையில் இறங்க, சிறிது நேரத்தில் கடற்படையின் மீட்பு குழுவும் அவர்களுடன் இணைந்து தேடுதலில் ஈடுபட்டது.

இதன்போது 11 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். இவர்களில் நால்வர் கிண்ணியா ஆதார மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 8 சிறுவர்கள் உட்பட 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

இந்த சம்பவத்தையடுத்து குறிஞ்சாகேணி, கிண்ணியா மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமைதி வழியில் தொடங்கிய போராட்டம் ரயர் எரிப்பு, கல்லெறி என்று வன்முறையாக மாறியது. இதைத் தொடர்ந்து கிண்ணியாவில் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக்கின் இல்லத்தின்மீது தாக்குதலை நடத்தினர். (ஐ)

## காப்பகத்தில்...

அன்ரிஜென் சோதனைகளை மேற்கொண்டதில் மேற்படி சிறுமிகளுக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஏனைய சிறுமிகள் மற்றும் அங்கு பணியாற்றுபவர்களுக்கு பி. சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பூநகரி பிரதேச சபையின் பட்ஜெட்டும் நேற்று தோல்வி

கிளிநொச்சி, நவ. 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த பூநகரி பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பூநகரி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவிசாளர் ஐயம்பிள்ளையால் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. இதன் போதே 3 மேலதிக வாக்குகளால் தோல்வி அடைந்தது.

இதன்போது ஆதரவாக 8 வாக்குகளும், எதிராக 11 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஒருவர் நடுநிலை வகித்தார். (இ)

# சாவகச்சேரியில் வாள்வெட்டு இளைஞர் ஒருவர் படுகாயம்!

தென்மராட்சி, நவ. 24

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

படுகாயம் அடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் 36 வயது நபரே காயமடைந்தவராவார். தனிப்பட்ட பகைமையே வாள்வெட்டுக்கான காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்தாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# யாழ். பல்கலையில் இன்று ஆய்வுரை!

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தால் வெளியிடப்படும் தெற்காசிய கற்கைகளுக்கான இலங்கை ஆய்வேடு பத்திரிகை குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட 'புகையிலை அரசி: 1784 -1844 வரையான காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஓர் அடிமை முறை சமூகம் இருந்தமைக்கான நிலைப்பாடு' என்ற தலைப்பில் ஆய்வுரை இடம் பெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் இந்த ஆய்வரங்கில் கனடா ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் கலாநிதி நிலை படிப்பை மேற்கொண்டிருக்கும் கலாநிதி மார்க் ஈ பாம்போர்த் ஆய்வுரை வழங்குவார். இதைத் தொடர்ந்து ஆய்வுரையை ஒட்டிய ஒரு கலந்துரையாடலும் இடம்பெறும். இந்த நிகழ்வில் அனைவரும் பங்கேற்க முடியும். (ஐ)

# தென்மராட்சியில் வெடிபொருள் மீட்பு

தென்மராட்சி, நவ. 24

கொடிகாமம் பிரதேசத்தின் வேம்பிராய் பகுதியில் பெருமளவு வெடிபொருட்கள் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

வேம்பிராயில் தனியார் காணி ஒன்றை துப்பரவு செய்த போது வெடிபொருட்களை அவதானித்த காணி உரிமையாளர் பொலிஸார் ஊடாக இராணுவத்தினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனை அடுத்து அங்கு சென்ற சிறப்பு அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் இணைந்து குறித்த வெடிபொருட்களை மீட்டுள்ளனர். (ஐ)

# முல்லைத்தீவு போக்குவரத்து திணைக்கள பணி நாளைமுதல்!

முல்லைத்தீவு, நவ. 24

கோவிட் 19 காரணமாக மூடப்பட்டிருந்த முல்லைத்தீவு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பணி நாளை வியாழக்கிழமை முதல் மீளவும் ஆரம்பிக்கப்படுகின்றது என்று மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

இருப்பினும் சாரதி அடையாள அட்டைகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதலே ஆரம்பிக்கப்படும். அத்துடன், எந்த சேவையைப் பெற விரும்புவர்களும் கட்டாயமாக 021 211 7116 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி திகதி மற்றும் நேரத்தை முற்பதிவு செய்தபின்னரே வருகைதர வேண்டும் என்றும் அறிவித்துள்ளார்.

மேலும், திகதி மற்றும் நேரத்தை முற்பதிவு செய்யாது வருகைதரும் சேவைபெறுநர்களுக்கான சேவையை வழங்குவதற்கு இயலாதநிலை ஏற்படுமெனவும் அவர் கூறினார். (ஐ)

# எதிரணி முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையாது!

## தொற்றாளர்களின் எண்ணிக்கையே உயரும் என்கின்றார் எஸ்.பி.



கொழும்பு, நவ. 24

நாட்டில் எதிர்க்கட்சியினர் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையாது. கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையே வளர்ச்சியடையும் எனத் தெரிவித்த அரச தரப்பு எம்.பியான எஸ்.பி. திஸாநாயக்க, அரச அதிகாரிகள் மத்தியில் உள்ள பயம் நீக்கப்படவேண்டும் எனவும், அமைச்சர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

"கொரோனா பாதிப்பு காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவது அவசியம். நாட்டில் அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவதை சர்வதேச சமூகம் பார்க்க வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு சர்வதேச முதலீட்டாளர்கள் வருகை தருவர்.

நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நிலையில் அரசுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய எதிர்க்கட்சியினர் அரசை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு மக்களை உசுப்பி விடும் நிலையே காணப்படுகின்றது. இந்நிலையில், நாட்டின் பொருளாதாரம் அன்றி கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையே அதிகரிக்கும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சந்தேகத்தை நீக்குவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும்போது முதலீட்டாளர்கள் வருவதற்கான சந்தர்ப்பங்களே இழக்கப்படும்.

கொரோனா வைரஸ் சூழ்நிலைக்குப் பின்னர் ஆசிய நாடுகளில் 1.2 ட்ரில்லியன் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியா, சீனா, சிங்கப்பூர், வியட்நாம், பங்களாதேஸ் போன்ற நாடுகளிலேயே அந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது நாட்டுக்கும் முதலீட்டாளர் வருகை தர வேண்டுமானால் எதிர்க்கட்சியின் பூரண ஒத்துழைப்பு அவசிய ம்

இதேவேளை, அரச அதிகாரிகள் மத்தியில் உள்ள பயம் நீக்கப்படவேண்டும். அமைச்சர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசமைப்பின் 52.2இல் அமைச்சர்கள் எடுக்கக்கூடிய தீர்மானம் தொடர்பில் சரத்துக்கள் உள்ளன. அதனை முறையாகப் பயன்படுத்தி அதிகாரிகள் பயமின்றி செயற்படுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது அமைச்சர்களின் பொறுப்பு" - என்றார். (இ)

## வடமாகாண மரநடுகை மாதம் 24 கார்த்திகை 2021

நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது.

இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

## கல்வி TV CHANNEL-1

24.11.2021
வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி TV CHANNEL - 2

24.11.2021
வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
24.11.2021 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## கூட்டமைப்பின் சீன எதிர்ப்பு கொள்கை!

கூட்டமைப்பின் நிபுணர் குழுவினரும், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளும் அண்மையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரிகளை சந்தித்திருந்தனர். இதன்போது அவர்கள் பேசிய விடயங்கள் தொடர்பில் இப்போது சில விடயங்கள் வெளியாகியிருக்கின்றன. அதில், முக்கியமானது சீனா தொடர்பில் அவர்கள் தெரிவித்திருந்த கருத்துக்களாகும். தமிழர் தாயகப் பகுதியான வடக்கு - கிழக்கில் சீனாவின் பிரசன்னத்தை தாங்கள் எதிர்ப்பதாக கூட்டமைப்பின் குழுவினர் அமெரிக்காவிடம் தெரிவித்திருக்கின்றனர். இதன்மூலம் - சர்வதேச விவகாரங்களில், சீன எதிர்ப்பை, தாம் ஒரு கொள்கை நிலைப்பாடாக கொண்டிருப்பதைக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருக்கின்றது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார செயலருடனான கலந்துரையாடலின் போதும், சம்பந்தன் இந்த விடயத்தை தெரிவித்திருக்கின்றார். அதாவது, வடக்கு - கிழக்கில் தாம் சீனாவின் பிரசன்னத்தை எதிர்ப்பதாக சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் சீனாவின் இலங்கைக்கான தூதுவர், சம்பந்தனை சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால், அந்த சந்திப்பு இடம்பெற்றமை தொடர்பில் தகவல்கள் இல்லை. ஆனால், தற்போது அமெரிக்காவில் வைத்தும் கூட்டமைப்பின் நிபுணர் குழுவும், கூட்டமைப்புடன் நெருங்கிச் செயல்படும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளும் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றனர். சில வாரங்களுக்கு முன்னர், புலம்பெயர் தமிழர் குழுவொன்று, சீனாவுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது பற்றிக் கலந்துரையாடியதாக ' தி இந்து' பத்திரிகையில் செய்தியொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, உலகத் தமிழர் பேரவையின் மூலோபாய இயக்குநர் சுரேன் சுரேந்திரன் - இலங்கையில் அதிகரித்து வரும் சீனச் செல்வாக்கு தொடர்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். அதில் சீன எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

உண்மையில் கூட்டமைப்பின் நிபுணர் குழுவுக்கும் குறிப்பிட்ட புலம்பெயர் பிரதிநிதிகளுக்கும் இந்த விடயத்தில் எந்தளவு தூரம் புரிதல்கள் இருக்கின்றன என்பதற்கு அப்பால் - கூட்டமைப்பிடம் அவ்வாறானதொரு கொள்கை நிலைப்பாடு இருக்குமானால் அது சரியான ஒன்றுதான். ஏனெனில், இன்றைய உலக ஒழுங்கு என்பது மேற்குலகம், சீனாவின் அணுகுமுறைகள் தொடர்பில் கடும் விமர்சனங்களுடன் இருக்கின்ற காலமாகும். அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தால் இந்தோ - பசுபிக் விவகாரங்களுக்கான இணைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் ஹேர்ட் ஹம்பல் - அண்மையில் தெரிவித்திருந்த ஒரு கருத்து அமெரிக்க - சீன போட்டிக்கான புதிய அத்தியாயம் ஆரம்பித்துவிட்டதைத் தெளிவாக உணர்த்துகின்றது.

அமெரிக்க - சீன ஊடாட்டத்திற்கான காலம் முடிவடைந்து விட்டதாக அவர் தெரிவித்திருக்கின்றார். இனிவரப் போகும் காலமென்பது - இரு நாடுகளுக்கிடையிலான போட்டியின் மேலாதிக்கத்துக்கு உட்பட்ட ஒன்றாகவே இருக்குமென்றும் ஹம்பல் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதோர் உலக அரசியல் சூழலில் - மனித உரிமைகள் மீறலுக்கான நீதியை கோரிநிற்கும் தமிழ் சமூகத்தின் தலைமைகள் சீனாவிற்கு எதிரான கொள்கை நிலைப்பாட்டைத்தான் வெளிப்படுத்த முடியும். ஏனெனில், மனித உரிமைகள் மற்றும் தாராளவாத ஜனநாயகத்தை எதிர்க்கும் சர்வாதிகாரப் போக்கே, சீனாவின் ஆட்சிக் கொள்கையாக இருக்கின்றது.

அமெரிக்க - சீன அதிகாரப் போட்டியில் - இதுவரையில் அமெரிக்கா மட்டுமே கூட்டாளிகளை அரவணைத்துக் கொண்டிருந்தது. நாடுகளுக்கு இடையிலான மூலோபாய கூட்டுக்கள் - அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படையான கூறுகளில் ஒன்றாகும். ஆனால், தற்போது சீனாவும் தனக்கான கூட்டாளிகளை தேடும் முயற்சியில் இறங்கியிருக்கின்றது. அடிப்படையில் சீனாவுக்குக் கூட்டாளிகள் குறைவு. ஏனெனில், இதுவரை சீனா மேலாதிக்க நிகழ்ச்சி நிரலுடன் செயல்பட்டிருக்கவில்லை. ஆனால், தற்போது சீனா ஆசியாவில் ஒரு சக்தியாக தன்னை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நிலையில், அதற்குக் கூட்டாளிகள் கட்டாயம் தேவை. பாக்கிஸ்தானுடனும் ரஷ்யாவுடனும் வலுவான கூட்டுக்களை பேணிவரும் சீனா, தென்கிழக்காசிய நாடுகளான மியன்மார், கம்போடியா, தாய்லாந்து, லாவோஸ் - ஆகிய நாடுகளை அதன் கூட்டாளி வட்டத்திற்குள் வைத்திருக்கின்றது. இந்த பின்புலத்தில், தெற்காசிய நாடுகளிலும் கூட்டாளிகளை இணைத்துக் கொள்ளும் முயற்சியில் சீனா நிச்சயம் இறங்கும். இந்த இடத்தில்தான் இலங்கை முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த இடம்தான் - அமெரிக்காவும் இந்தியாவும் ஒரு புள்ளியில் சந்திக்கும் இடமாகும்.

ஆனால், இதில் ஆபத்துக்களும் உண்டு. ஏனெனில், கொழும்பு அதிகம் சீனாவின் பக்கமாக செல்வதை தடுக்கும் வகையில் அமெரிக்க - இந்திய தரப்புக்கள் சில காய்களையும் நகர்த்த வேண்டியிருக்கும். இந்த நகர்வின் போதுதான், ஈழத்தமிழர்கள் ஒரு விடயமாக இருப்பர். சீனாவை எதிர்க்கும் கூட்டமைப்பின் கொள்கை நிலைப்பாடு சரியானது. ஆனால், இந்த நகர்வுகளை பயன்படுத்திக் கொண்டு - தமிழ் மக்களுக்கான நன்மைகளை பெறும் வல்லமை, தமிழ் தலைமைகளிடம் இருக்க வேண்டும். ஏனெனில், அலுவல்கள் முடிந்ததும் அனைவரும் சென்றுவிடுவர். காலத்தை சரியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தவில்லையாயின் தமிழர்கள் மட்டுமே தனித்துநிற்க வேண்டிவரும்.

# 'மாவீரர் வாரம்'

- அலசுவது இராஜதந்திரி -



*எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ 'மாவீரர் வார' அனுஷ்டிப்புக் குறித்து கருத்து வெளியிட்டபோது யுத்த காலங்களின் போதும் வன்முறைகளின்போதும் இறந்தவர்களை நினைவுகூருவதை எவரும் தடுக்கக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*வடக்கு - கிழக்கில் தற்போது பொலிஸார் யுத்தத்தில் இறந்தவர்களை மாவீரர் வாரம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நிர்ணயித்த காலப்பகுதியில் நினைவு கூருவதை தடுக்கும் விதத்தில் நீதிமன்றங்களை நாடி வருகின்றனர். இருந்தபோதிலும் சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் நீதிமன்றங்கள் மாவீரர் வாரத்தில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கு பொலிஸார் தடைபோடும் விதத்தில் சமர்ப்பித்த மனுக்களை நிராகரித்துள்ளன.*

*தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிரமாக இயங்கிய கால கட்டத்தில் தமிழர் பிரதேசம் முழுவதும் மாவீரர் வாரம் மிக விரிவான முறையில் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. அத்துடன், மாவீரர் நாளான - நவம்பர் 27ஆம் திகதியன்று போரில் ஆகுதியான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நினைவாக நினைவாக ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்துவதோடு தமது மாவீரர் தின உரையையும் வே. பிரபாகரன் நிகழ்த்தி வந்திருந்தார்.*

*ஆனால், 2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்த சமயத்தில் போராடி இறந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மட்டுமல்ல. எண்ணிலடங்காது இறந்த அப்பாவிப் பொது மக்களும் நினைவுகூரப்பட வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.*

*எண்பதுகளின் ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கில் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பித்தபோது, ஆயுதப் படையினருடனான போராட்டங்களில் பலியானவர்கள் ஒருபுறமிருக்க, அன்றிருந்த பலதரப்பட்ட ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையே நிலவிய பகைமை உணர்வு காரணமாக கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கைகூட எண்ணிலடங்காதவையாகவே இருக்கின்றன.*

*சகோதர இயக்கங்களை இல்லாதொழிப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மிகத்தீவிரமாகவே இயங்கியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட ஆயுதப் போராட்ட அமைப்புகளில் ரெலோ அமைப்பும், ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்புமே மிக மோசமான இழப்புகளை சந்தித்திருந்தன. அத்துடன், இந்த இரு இயக்கங்களின் தலைவர்களும்கூட தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர்.*

*வடக்கு - கிழக்கு யுத்த நிலவரங்கள் ஒரு முப்பரிமாணத் தன்மையைக் கொண்டிருந்ததையே நோக்க முடியும். ஒருபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையிலான இடம்பெற்ற யுத்தம் இடம்பெற்றிருந்தது. அத்தருணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் சகோதர இயக்கங்களை களையெடுக்கும் யுத்தத்தை நடத்தியிருந்தனர். இவற்றுடன் இந்திய அமைதிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மட்டுமல்ல. ஏராளமான பொது மக்களும் கொல்லப்பட்டிருந்தனர்.*

*வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆயுதப் போராட்டங்களால் ஏற்பட்ட இழப்புகள் ஒருபுறமிருக்க தென்னிலங்கையிலும் அந்தப் போராட்டத்தின் வெளிப்பாடாக பலர் கொல்லப்பட்டனர். அவர்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் அ. அமிர்தலிங்கம் உட்பட பல முக்கிய அரசியல் பிரமுகர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் மிக முக்கியமானவரே எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தந்தையாரும் மறைந்த ஜனாதிபதியுமான ரணசிங்க பிரேமதாஸ என்பது குறிப்பிடத்தக்கது.*

*முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொழும்பில் மே தின ஊர்வலத்தில் பங்குபற்றத் தயாரானபோது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்கொலை குண்டுதாரி ஒருவரால் கொல்லப்பட்டார்.*

*இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் என்ற ரீதியில் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கு யுத்தத்தின் விளைவாக தமது தந்தையாரையும் பறிகொடுத்த ஒருவர் என்ற வகையில் சஜித் பிரேமதாஸ இறந்தவர்கள் மாவீரர் வாரத்தின் போது நினைவுகூரப்பட வேண்டுமென தெரிவித்திருப்பது இறந்தவர்கள் என்போர் பகைவர்களாக இருந்தாலும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள் என்பதையே எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.*

*இதுதவிர, மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) அமைப்பினர் ஆண்டுதோறும் தமது தலைவர் ரோஹன விஜயவீர உட்பட தென்னிலங்கையில் ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது கொல்லப்பட்டவர்கள் நினைவு கூரப்படுவதை அரச தரப்பினர் தடுப்பதில்லை. இந்த நிலையில் உயிரிழந்தோரை நினைவுகூருவதில் தென்னிங்கையில் ஒரு சட்டம், வடக்கு - கிழக்கில் ஒரு சட்டம் இருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்துவதாகவே வடக்கு - கிழக்கின் சில நீதிமன்றங்கள் மாவீரர் வாரத்தை தடுக்கப் பொலிஸார் விடுத்த கோரிக்கைகளை நிராகரித்துள்ளமை இடித்துரைக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



நவம்பர் - 24 புதன்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 08
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பஞ்சமி

## இன்றைய ராசிபலன்

24.11.2021

**மேடம்** பணப்புழக்கம் முன்பைவிடச் சற்றே மேம்படும். சலிப்பு தீரும். நடுவில் நின்றுபோயிருந்த நன்மைகள் இன்றிலிருந்து தொடரும். பல நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி வரும்.

**இடபம்** குடும்பத்தினருக்கு நன்மை ஒன்று வந்து உங்களை மகிழ்விக்கும். உஷ்ணம் சம்பந்தமான சிரமம் வராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். நின்றுபோயிருந்த பேச்சுவார்த்தை திடீரென தொடரும்.

**மிதுனம்** வாழ்க்கைத்துணைக்கு திடீர் அதிர்ஷ்டம் வரும். மகிழ்ச்சி கூடும். இளம் வயதினருக்கு காதலில் ஈடுபாடு புதிதாக வரும். குடும்பத்தில் புதிய வரவு ஒன்று உறுதி செய்யப்படும்.

**கடகம்** நன்கு உழைக்கும் மாணவர்களுக்கு நற்செய்தி உண்டு. புதிய விஷயம் கற்கும் ஆர்வமும், ஈடுபாடும் உங்களுக்கு வரும். உங்களின் புத்திசாலித்தனமும், கவர்ச்சி அம்சமும் ஒருங்கே அதிகரிக்கும்.

**சிம்மம்** கலை ஆர்வம் ஏற்படும். பணியிடத்தில் நல்ல செய்தி உண்டு. அதிர்ஷ்டம் காரணமாக நன்மை வரும். தந்தைக்கு நற்செய்தி வரும். எதிர்பாலினத்து நட்புகளுடன் மகிழ்ச்சியாகப் பொழுது போகும்.

**கன்னி** கவலை ஒன்று தீரும். ஒன்றுக்கு மேற்பட்ட லாபங்கள் வரும். வாழ்க்கைத்துணையால் நன்மை ஏற்படும். பொறுமை வெல்லும். தொல்லை ஒன்றிலிருந்து விடுபடுவீர்கள். தாமதம் தீரும்.

**துலாம்** திறமையான பேச்சினால் பிரச்னை ஒன்றைத் தீர்ப்பீர்கள். குடும்பத்தில் காணாமல் போயிருந்த கலகலப்பு மீளும். தடை, தாமதங்களை கண்டு பயப்படாமல் எதிர்த்து வெல்லுங்கள்.

**விருட்சிகம்** திடீரென்று நல்ல செய்தி கிடைத்து உங்களை திக்குமுக்காட வைக்கும். குடும்பத்தில் ஒரு வரால் பெருமிதம் அளிக்கும் நன்மை உண்டாகும். பொறுமையால் வெற்றி பெற்று நிம்மதி அடைவீர்கள்.

**தனுசு** பேச்சிலும், செயலிலும் கவனமாக இருந்தால் பிரச்னை வராது. குழந்தைகளால் ஏற்பட்டிருந்த பயம் நீங்கும். நட்பு வட்டம் விரியும். திடீர் நற்செய்தி வந்து மகிழ்விக்கும். புது விஷயம் கற்பீர்கள்.

**மகரம்** தாயாருக்கு நன்மை செய்து அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். வேலை தேடுவோருக்கு நற்செய்தி கிடைக்கும். பெண்கள் பேச்சை குறைக்கவும். உறவினர்களின் பிரச்னையில் தலையிட வேண்டாம்.

**கும்பம்** உடல், மனதில் ஏற்பட்டுள்ள சோர்வு தற்காலிகமானதே. பணியாளர்கள் நிலுவைப் பணிகளை செய்து முடித்து நிம்மதி அடைவீர்கள். மனதில் தீய எண்ணம் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மீனம்** புதிய விஷயங்களில் ஈடுபடுவது பற்றி இன்று யோசிப்பீர்கள். நண்பருக்கு நன்மை செய்வீர்கள். உங்களின் எதிர்பார்ப்பு தாமதித்து நிறைவேறும். பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். நிதானமான நன்மைகள் உண்டு.

# தமிழகத்தில் பயங்கரவாதிகள்; அரசுக்கு பா.ஜ.க. எச்சரிக்கை!

சென்னை, நவ. 24

"மத அடிப்படைவாத பயங்கரவாதிகளுக்கான இருப்பிடமாக தமிழகம் மாறாமல் இருக்க தமிழக அரசு எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும்" என தமிழக பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் நாராயணன் திருப்பதி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"கடந்த வாரம் கேரளாவில் மனைவி முன்னே 27 வயது இளைஞர் சஞ்சித் படுகொலை செய்யப்பட்டார். அவரை கொன்ற கும்பல் கோவைக்கு தப்பி சென்றிருக்கலாம் என கேரள காவல் துறை கூறியுள்ளது. தமிழகத்தில் அவர்கள் பதுங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணை நடப்பதாக சொல்லப்படுகிறது.

ஏற்கனவே தமிழகத்தில் நடந்த ராமலிங்கம் சசிகுமார் எஸ்.ஐ.வில்சன் படுகொலையில்மத அடிப்படைவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டனர். இந்நிலையில் கேரளாவில் படுகொலை செய்துவிட்டு தமிழகத்துக்கு தப்பி உள்ளதாக சொல்லப்படுவது அதிர்ச்சி அளிக்கிறது.

மத அடிப்படைவாத



பயங்கரவாதிகளுக்கான இருப்பிடமாக தமிழகம் மாறிவிடக் கூடாது என்ற அக்கறையோடு காவல் துறையும் தமிழக அரசும் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டியது அவசியம். பயங்கரவாதிகளுக்கு துணை போகும் அமைப்புகளை தடை செய்யவேண்டிய நேரம் இது என்பதை உணரவேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# புதுச்சேரியில் தனித்துப் போட்டியிட்டு பா.ம.கவினால் ஆட்சிக்கு வர முடியும்

## நிர்வாகிகள் கூட்டத்தில் டாக்டர் ராமதாஸ் பேச்சு

புதுச்சேரி, நவ. 24

பா.ம.க. தனித்துப் போட்டியிட்டு, 6 இடங்களைப் பெற்றாலே புதுச்சேரியில் ஆட்சிக்கு வந்து விட முடியும் என்று அக் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மாநில பா.ம.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பட்டானூரில் உள்ள தனியார் திருமண நிலையத்தில் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு கட்சித் தலைவர் ஜி.கே. மணி முன்னிலை வகித்தார்.

"நாம் எதிர்பார்த்த வெற்றியைப் பெற, கட்சியில் மாற்றமும் செய்யப்படுகிறது" என்று



குறிப்பிட்ட பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், மேலும் தெரிவித்ததாவது:

"புதுச்சேரியில் பாமக ஆட்சிக்கு வர வேண்டும். கட்சியைப் பலப்படுத்த இனி நாம் அரசியல் செய்யாமல் பாசப் பிணைப்பையே ஏற்படுத்த வேண்டும். 'புதுவையை விட்டு விட்டீர்களே!' என பலரும் கேட்கின்றனர். இதே மாநிலத்தில் என்னை கொலை செய்ய முயற்சித்தனர். ஆனால். அன்று தப்பித்தேன்.

புதுவையில் கொள்கை உடைய கட்சியாக பா.ம.க. உள்ளது. மீண்டும் புத்துயிர் பெற்று வேகமாக செயல்பட்டு, புதுச்சேரியில் 4 தொகுதிகளிலும், காரைக்காலில் 2 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். நாம் தனித்துப் போட்டியிட்டு இங்கு 6 இடங்களைப் பெற்றாலே ஆட்சிக்கு வந்து விட முடியும். கூட்டணியெல்லாம் வேண்டாம், வெற்றிக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதற்காக வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரசாரம் செய்யுங்கள்" என்று ராமதாஸ் கூறினார்.

# பெற்றோல், டீசல் விலையைக் குறைக்க வலியுறுத்தி 8 நாள்களுக்கு போராட்டம்

## தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை அறிவிப்பு

சென்னை, நவ. 24

பெற்றோல், டீசல் மீதான தமிழக அரசின் வரியை குறைக்க வலியுறுத்தி தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணா மலை, முன்னாள் தலைவர் பொன்.ராதா கிருஷ்ணன் உள்ளிட்டோர் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழகம் முழுவதும் 8 நாள்கள் போராட்டம் நடத் தப்படும் என்று தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை அறிவித்துள்ளார்.

பெற்றோல், டீசல் விலையை தமிழக அரசு குறைக்க வலியுறுத்தி பா.ஜ.க. இளைஞர் அணி சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நேற்று ஆர்ப்பாட் டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் அண்ணா



மலை பேசியதாவது:

பெற்றோல், டீசல் மீதான வரிகளை மத்திய அரசு வெகுவாக குறைத்துள்ளது. அதைத் தொடர்ந்து, பெற்றோல், டீசல் மீதான மாநில அரசின் வரிகளை பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் குறைத்தன. காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள்கூட வரிகளை குறைத்து விட்டன. இதனால், தமிழகம் தவிர்த்த மற்ற மாநிலங்களில் பெற்றோல், டீசல் விலை குறைவாக உள்ளது. பா.ஜ.க கூட்டணி ஆட்சி நடைபெறும் புதுச்சேரியில் தமிழகத்தைவிட குறைவாக உள்ளது.

எனவே, பெற்றோல், டீசல் மீதானதமிழக அரசின் வரியை குறைக்கக் கோரி பா.ஜ.க. சார்பில் போராட்டம் நடத்தி வருகிறோம். தமிழக அரசு விலையை குறைக்கும் வரை போராடுவோம். பேற்றோல், டீசல் விலையை குறைக்குமாறு தமிழக அரசை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் 8 நாள்கள் போராட்டங்கள் நடைபெறும் என்றும் அண்ணாமலை அறிவித்துள்ளார்.

# மக்களை ஏமாற்றும் செயல்: பன்னீர்



"தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாதது, மக்களை ஏமாற்றும் செயல்" என அ.தி.மு.க., ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்திய அரசு, பெற்றோல் மீதான வரியை, லீற்றருக்கு 5 ரூபாய், டீசல் மீதான வரியை லீற்றருக்கு 10 ரூபாய் குறைந்துள்ளது. அதை பின்பற்றி காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் உட்பட, இந்தியாவில் உள்ள 25 மாநிலங்கள் மதிப்புக் கூட்டு வரியை கணிசமாக குறைத்துள்ளன. தமிழக அரசும் வரியை குறைக்கும் என எதிர்பார்த்த நிலையில், 2014இல் இருந்த அளவுக்கு, வரியை மத்திய அரசு குறைக்க வேண்டும். இதையெல்லாம் தெரிந்து தானே, தி.மு.க., தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதில் நிபந்தனை எதுவும் இல்லையே. தற்போது, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தினால், மத்திய அரசு விலைகளை குறைக்க வேண்டும் என, தமிழக நிதி அமைச்சர் கூறுகிறார். இது, மக்களை ஏமாற்றும் செயல" என அவர் கூறியுள்ளார்.




# இலக்கத் தகடற்ற பஸ் மோதியதில் மாணவி உட்பட இருவர் படுகாயம்!

## தாவடிச் சந்தியில் நேற்று காலை சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம், தாவடிச்சந்தியில் பஸ் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த தந்தையும், மகளும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 8 இல் கல்வி பயிலும் மாணவியை பாடசாலைக்கு தந்தை அழைத்துச் சென்ற போது இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய தந்தை தலைக் கவசம் அணிந்திருந்த போதும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அதிக குருதி வெளியேறியது. அதேநேரம் மோட்டார் சைக்கிளில் பயணித்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவியும் படுகாயமடைந்தார்.

இலக்கத்தகடற்றுக் காணப்பட்ட குறித்த பஸ் மிகவும் பழையது என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-03)

# நாடு எந்நேரமும் முடக்கப்படலாம்!

## பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 24

**பொறுப்பற்ற சிலரின் நடவடிக்கை காரணமாக நாடு எந்த நேரத்திலும் முடக்கப்படலாம் எனவும், அதற்கான புதிய சுகாதார வழிகாட்டல்களை வெளியிடுவதற்கான அவகாசம் மாத்திரமே தேவைப்படும் நிலை காணப்படுவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.**

நாட்டை முடக்கும் நடவடிக்கையானது எந்த நேரத்திலும் எடுக்கக்கூடியதொன்றென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதற்கான சுகாதார வழிகாட்டல்களை மாத்திரமே வெளியிட வேண்டியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாட்டில் தற்போது மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது குறைந்து வருகிறது. சிலர் பொது இடங்களில் முகக்கவசம் அணியாமலும் இருக்கின்றனர். மீண்டுமொரு முடக்க தேவையா இல்லையா என்பதை நாட்டு மக்களின் நடத்தையே தீர்மானிக்கும்.

எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் நாடு மூடப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டால் அதிர்ச்சியடைய வேண்டாம். பொறுப்பற்ற சிலர் இரகசியக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்கிறனர்.

தற்போதைய, தீவிரமான சூழ்நிலையிலிருந்து மீள முயற்சிக்கும் நேரத்தில் இதுபோன்ற கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்வதையும் பங்கேற்பதையும் தவிர்க்குமாறு கோருகிறேன்.

அத்துடன், உரிய தரப்பினரிடம் அனுமதி பெறாது முன்னெடுக்கப்படும் நிகழ்வுகள் ரத்து செய்யப்படலாம்.

அனுமதி பெறாமல் இது போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.



பண்டிகை நாட்கள் நெருங்கும் பட்சத்தில் வர்த்தக நிலையங்களில் அதிகளவில் வாடிக்கையாளர்கள் கூடுவதனை தவிர்க்கவேண்டும்.

இந்தப் பண்டிகைக் காலத்தில் மீண்டும் ஒரு கொவிட் கொத்தணி உருவாகாமல் இருப்பதற்காக நாம் கவனத்துடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# திருமணம் செய்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி!

கொழும்பு, நவ. 24

2019ஆம் ஆண்டு தொடக்கம் 2020 க்கு இடையில் இலங்கையில் திருமண பதிவுகளின் எண்ணிக்கை 12 வீதம் குறைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் மொத்தம் 163, 378 திருமணப் பதிவுகள் பதிவாகியுள்ளதாகவும், 2020 ஆம் ஆண்டில் அது 143,061 ஆக குறைந்துள்ளதாகவும் திணைக்களம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான திருமணப் பதிவுகள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. அங்கு 14, 617 திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2000-2012 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2013 - 2020 க்கு இடையில் திருமணப் பதிவுகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

2000-2012 க்கு இடையில் வருடாந்தம் கிட்டத்தட்ட 200,000 திருமண பதிவுகள் பதிவாகியுள்ளன.

2000 ஆம் ஆண்டில் மொத்தம் 194,217 திருமணங்களும் 2005 இல் 195,067 திருமணங்களும் பதிவாகியுள்ளன. 2010 இல் 200,985 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டன.

எவ்வாறாயினும், 2015 இல் 175,939 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டதன் மூலம் அதன் பின்னர் ஒரு குறைவு காணப்பட்டது.

2020 இல் 143,061 திருமணங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டதன் மூலம் எண்ணிக்கை மேலும் குறைந்துள்ளது.

# சுகாதார தொழிற்சங்க போராட்டம்!

கொழும்பு, நவ. 24

இன்றும் நாளையும் மற்றொரு அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்படும் என்று துணை மருத்துவத் தொழில் வல்லுநர்களின் இணைந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 17ஆம் திகதி அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அரசாங்க அதிகாரிகளும் சுகாதார அமைச்சும் தமது கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கத் தவறியதாகவும் கலந்துரையாடலுக்கான வாய்ப்பை வழங்கத் தவறியதாகவும் கூட்டுச் தொழிற்சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

# தயாசிறியின் புதிய யோசனை

கொழும்பு, நவ. 24

நாட்டின் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுத்து எரிபொருள் இறக்குமதியில் சிக்கல் ஏற்பட்டுள்ள நிலையில், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர புதிய யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளார்.

ஒரு வீதியில் பயணிக்கும் வாகனத்தில் குறைந்தது மூன்று பேராவது பயணிக்கவேண்டும் என தான் யோசனை ஒன்றை முன்வைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை வீதிகளில் வாகனம் ஒன்று பயணித்தால், அந்த வாகனத்தில் மூன்று அல்லது நான்கு பேர் இருக்கவேண்டும் என்று சட்டம் கொண்டு வர வேண்டும். ஒரு வாகனத்தில் ஒருவர் மாத்திரமே ஏறும் நிலை உள் ளது. இதனால் அதிக அளவு எரிபொருள் பயன்படுத்தப்படு கின்றது.

இந்த நேரத்தில் நாம் அனைவரும் வாகனங்களை இறக்குமதி செய்வது பற்றி மாத்திரம் யோசிக்காமல், இருக்கும் வாகனங்களை வீதிகளில் செலுத்துவதற்கு முன் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும்-என்றார். (அ)

# கோப்பாய் துயிலும் இல்லப் பகுதியில் நேற்று சிரமதானப்பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று சிரமதானப்பணிகளை முன்னெடுத்தனர்.

அந்தப் பகுதியில் கடந்த இரு தினங்களுக்கு முன்பிருந்து இராணுவத்தினர் துப்பரவு செய்து, அங்கு காவலரண்களை அமைத்து இரவு, பகலாக கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் நேற்று முன் தினம் முதல் பொலிஸாரும் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.



இந்த நிலையில் குறித்த பகுதிக்கு நேற்றுக் காலை சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் துப்பரவுப் பணியை மேற்கொண்டனர். (அ)

# அமைச்சரால் என்னை பதவி நீக்கவேமுடியாது

## பீடைக்கொல்லி பதிவாளர் சுமித் பதிலடி

கொழும்பு, நவ. 24

பீடைக்கொல்லி பதிவாளர் பதவியில் இருந்து தன்னை நீக்க முடியாது என ஜே.ஏ.சுமித் தெரிவித்துள்ளார்.

பீடைக்கொல்லி பதிவாளர் பதவியிலிருந்து கலாநிதி ஜே.ஏ. சுமித் நீக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார்.

அத்துடன், கிளைபோசேட் உள்ளிட்ட 5 பீடைகொல்லிகளை பயன்படுத்தல் மற்றும் விற்பனையைத் தடை செய்யும் வர்த்தமானியை ரத்து செய்யும் வகையில் நேற்று முன்தினம் இரவு அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டமை தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இந்த நிலையில் உரிய சட்ட அனுமதியை பெற்றே மேற்படி வர்த்தமானியை வெளியிட்டதாகவும், அதனால் அமைச்சரால் தன்னைப் பதவியிலிருந்து நீக்க முடியாது எனவும் பீடைக் கொல்லி பதிவாளர் ஜே.ஏ.சுமித் தெரிவித்துள்ளார். (அ)




# யாழ். இந்திய துணைத் தூதுவர் கார்த்திகைப் பூ அணிந்தாராம்!

கொழும்பு, நவ. 24

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் ‘மலர் முற்றம்’ கண்காட்சி யாழ். சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுவருகின்றது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரன் விடுதலைப் புலிகளுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வுக்குச் சென்றார் எனவும், நிகழ்வில் கார்த்திகைப் பூ அணிந்துள்ளார் என்றும் தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# எம்.பி. பதவியை துறப்பதற்கு மஹிந்த சமரசிங்க தீர்மானம்

கொழும்பு, நவ. 24

தான் எதிர்வரும் சில தினங்களில் பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜிநாமா செய்யப் போவதாக மஹிந்த சமரசிங்க எம்.பி. நேற்று சபையில் தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் தூதுவர் பதவியை ஏற்பதற்காகவே இவ்வாறு பதவியை இராஜிநாமா செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கமைய, எதிர்வரும் 29ஆம் திகதி அமெரிக்காவுக்கு



பயணமாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க ஓய்வுபெற்று சென்றுள்ளதை அடுத்து அந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தௌபீக் எம்.பியின் இல்லம் மீது தாக்குதல்

திருமலை, நவ. 24

கிண்ணியா படகு விபத்தில் மாணவர்கள் உயிரிழந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள் , திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த படகு சேவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் மேற்கொள்ளவில்லையென மக்கள் சாடியுள்ளனர்.

அதேசமயம் அதிகளவானோரை படகில் ஏற்றியமையே விபத்திற்கான காரணமென பொலிஸ் அறிவித்துள்ளது.



# பொதுமக்களின் பாதுகாப்புக்கே அரசாங்கம் முன்னுரிமையளிக்கும்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 24**

**பொதுமக்களின் பாதுகாப்புக்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்குமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின்போதே அவர் இதனைக் கூறினார்.**

புதிய அரசமைப்புக்கான வரைவு தற்போது வகுக்கப்படுவதாகவும் அது பாராளுமன்ற உறுப்பினர்களின் விவாதத்துக்கு முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் பொதுமக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் மக்கள் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்கள் உரிய நேரத்தில் எட்டப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும் அதற்கமைவாக குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களுடன் கூடிய வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமர்ப்பித்தார் எனவும் பிரதமர் கூறினார். (அ)

# மொனராகலையில் 84 பேருக்கு தொற்று

கொழும்பு, நவ. 24

மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சியம்பலாண்டுவ மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களில் 84 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மொனராகலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

சியம்பலாண்டுவ பிரேதேசத்தில் 53 பேருக்கும் மொனராகலை பிரதேசத்தில் 31 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மொனராகலை பொது வைத்தியசாலையில் 37 பேர் கொரோனா தொற்றினால் சிகிச்சை பெற்று வருவதுடன் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

மொனராகலை டிப்போ வீதியை சேர்ந்த ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(அ)

# இராஜாங்க அமைச்சரின் சிரிப்பின் விளைவாக கிண்ணியாவில் பல உயிர்கள் பறிபோயுள்ளன

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

குறிஞ்சாக்கேணிப் பாலத்தை புனரமைத்துத்தரு மாறு கோரிக்கை விடுத்தபோது விடயத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் கேவலமாக சிரித்தார் என்றும் அந்த சிரிப்பின் விளைவாக பல உயிர்கள் இன்று காவு கொள்ளப்பட்டுள்ளன எனவும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலை-குறிஞ்சாக்கேணியில் மோட்டார் பொருத்தப்பட்ட மிதப்புப்பாலம் மூழ்கிய விபத்தில் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர், “திருகோணமலை - குறிஞ்சாக்கேணியில் பாலம் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வரும் பகுதியில், பொருத்தப்பட்ட மிதப்புப் பாலம் மூழ்கிய விபத்தில் இது வரையில் 10 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இதில் அதிகமானவர்கள் பாடசாலை செல்லும் மாணவ மாணவிகளாக காணப்படுகின்றனர். இதுவொரு பெரிய பிரச்னையாக காணப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக இதற்கு முன்னர் விடயத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சரிடம் நான் கேள்வி எழுப்பியபோது, குறித்த இடத்தில் பாலத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர், அதற்கான பதில் பாதையொன்றை நிர்மாணிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாக கோரியிருந்தேன். இதைக் கேட்ட இராஜாங்க அமைச்சர் கேவலமாக சிரித்தார். அந்த சிரிப்பின் விளைவாக பல உயிர்கள் இன்று காவுகொள்ளப்பட்டுள்ளன.

எனவே குறித்த பாதை சட்டபடி இயங்குகிறதா? எந்த அனுமதியுடன் இயங்குகின்ற பாதை? இதற்கு யார் பொறுப் புக்கூற வேண்டும் என்பதை அறிவிக்க வேண்டும் - என்றார். (அ)

# தரமற்ற படகுப்பாதைக்கு அனுமதி வழங்கியது யார்?

## விசாரணை கோருகிறார் ஹக்கீம்

கொழும்பு, நவ. 24

“வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியின்றியே கிண்ணியாவில் இந்த தரமற்ற தற்காலிக படகுப் பாதை இயங்கியுள்ளது. இது தொடர்பில் உடனடி விசாரணை வேண்டும்.”- என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

நேற்று கிண்ணியாவில் இடம்பெற்ற படகுப்பாதை விபத்தில் மாணவர்கள் உயிரிழந்தமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“புதிய பாலம் அமைப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சி பாராட்டத்தக்கது. அதேபோல தற்காலிக படகுப்



பாதையை நிறுவி, கட்டணமற்ற சேவையை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளும் அடுத்த மாதம் இடம்பெற இருந்தது.

இந்த படகுப்பாதைக்கு அனுமதி இல்லை. வீதி அபிவிருத்தி சபையின் அனுமதியின்றி தரமற்றதை பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டுள்ளமையே விபத்துக்கு காரணம். இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.”- என்றார்.

# மாவீரர் தினத்தன்று பொது இடங்களில் துணிந்து அஞ்சலி செலுத்த வாருங்கள்!

## அரசியல் பிரதிநிதிகளுக்கு சிவாஜி அழைப்பு



யாழ்ப்பாணம், நவ. 24

**மாவீரர் தினத்தன்று அரசியல் செயல்பாட்டாளர்களும் அரசியல் பிரதி நிதிகளும் மௌனமாக இருக்காது, துணிந்து பொது இடங்களிலும் ஆல யங்களிலும் அஞ்சலியை செய்ய முன்வர வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கட்சியின் பொதுச் செயலா ருமான எம். கே. சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.**

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாவீரர் நாளை அனுஷ்டிப் பது தொடர்பாக இலங்கை அரசு, பொலிஸார் ஊடாக நீதி மன்றங்களை அணுகி, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தடை களை ஏற்படுத்தி வருகின்றது.

இந்தச் சூழல் பின்னணி யிலேயே, தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவு கூர முற்படுகின்றார்கள் எனக் கூறி, எங்கள் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தடை உத்தரவு களை பெற்றிருக்கிறார்கள். சில நீதிமன்றங்கள் தடை உத்தரவு களை பிறப்பிக்க மறுப்பு தெரி வித்து இருக்கின்றன.

மேலும், மாவீரர் நினைவு தினங்கள் இடம்பெறும் துயிலு மில்லங்கள் தற்போது இராணுவ முற்றுகைக்குள் காணப்படுகின்றன.

இந்நிலையில் தீருவில் பொதுப் பூங்காவில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவ தற்கான அனுமதியை வல்வெட் டித்துறை நகர சபைத் தலை வரிடம் கேட்டிருக்கின்றோம். அந்த அனுமதி கிடைத்தவுடன் சுகாதாரத் துறையின் அனு மதியுடன் நவம்பர் 27ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின் றோம்.

குறிப்பாக அரசியல் செயற் பாட்டாளர்களும் அரசியல் பிரதிநிதிகளும் இதில் மௌன மாக இருக்காது, துணிந்து பொது இடங்களிலும் ஆலயங்களிலும் அஞ்சலியை செய்ய முன்வர வேண்டும் - என்றார். (அ)



## தொற்றிலிருந்து மேலும் 418 பேர் குணமடைவு

கொழும்பு, நவ. 24

கொரோனா வைரஸ் தொற் றில் இருந்து மேலும் 418 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று செவ்வாய்க்கிழமை வீடு களுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனா தொற் றில் இருந்து குணமடைந்தவர்க ளின் எண்ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயிரத்து 528 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 57 ஆயிரத்து 172 ஆக பதிவாகியுள்ளது.





## வலி.மேற்கு பட்ஜெட் நேற்று நிறைவேறியது

யாழ்ப்பாணம், நவ. 24

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2 ஆயிரத்து 22 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 18 மேலதிக வாக்கு களால் நிறைவேற்றப்பட்டுள் ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை வலி.மேற்கு பிரதேச சபையின் அமர்வு, தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தலைமையில் சபையின் பிர தான மண்டபத்தில் நடை பெற்றது.

இதன்போது தவிசாளரால் வரவு - செலவுத் திட்ட முன் மொழிவுகள் சபையில் சமர்ப் பிக்கப்பட்டு விவாதங்கள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து வரவு - செலவு திட்டம், வாக்கெடுப் புக்கு விடப்பட்டபோது 18 மேலதிக வாக்குகளால் நிறை வேற்றப்பட்டது.

25 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 9 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 5 உறுப் பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும் மற்றும் சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 19 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் ஓர் உறுப்பினர், வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்த அதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 4 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினரும் சபை அமர்வில் கலந்துகொள்ள வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (அ-03)

## சட்டவிரோதமாக ஒரு தொகை பணத்தை டுபாய் கொண்டுசெல்ல முயன்றவர் கைது

கொழும்பு, நவ. 24

சட்டவிரோதமான முறை யில் ஒரு தொகை பணத்தை டுபாய்க்கு கொண்டுசெல்ல முயற்சித்த நபரொருவர் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து ஒரு கோடியே 40 இலட்சத்து 60,000 ரூபாய் பெறுமதியான உள்நாட்டு மற் றும் சர்வதேச நாணயம் காணப் பட்டதாக சுங்கப்பிரிவு தெரி வித்துள்ளது.



கொழும்பைச் சேர்ந்த 27 வயதான வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார்.

டுபாய் செல்வதற்காக வந்தி ருந்த குறித்த சந்தேகநபர் பயணப் பொதியில் சூட்சுமமாக வைத்து பணத்தொகையை கொண்டு செல்ல முயற்சித்த தாக சுங்க அதிகாரிகள் தெரி வித்தனர். (அ)

## குழந்தையை உயிருடன் புதைக்க முற்பட்ட இளம் பெண்ணும் தாயாரும் யாழில் கைது!

யாழ்ப்பாணம், நவ. 24

மட்டுவில் பகுதியில் இளம் பெண்ணொருவருக்கு பிறந்த தாக கருதப்படும் பச்சிளம் குழந்தை ஒன்றை, அந்தப் பெண்ணும் அவரின் தாயாரும் உயிருடன் புதைக்க முற்பட்ட நிலையில் அயலவர்களால் குழந்தை காப்பாற்றப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் முத்துமாரி அம் மன் ஆலயத்தை அண்மித்த பகுதியில் 18 வயதுடைய இளம் பெண், தனது பச்சிளம் குழந்தை ஒன்றை நிலத்தில் புதைப்பதற்கு அவருடைய தாயாருடன் முனைந்தார் என அயலவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு அவர்கள் இரு வரும் செயற்படும்போது, குழந்தை அழுததால் தாம் அங்கு விரைந்து அசம்பாவி தத்தை உணர்ந்து குழந்தையை மீட்டுக் காப்பாற்றியதாக பொலி ஸாரின் விசாரணைகளில் அய லவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், குழந்தை சாவகச் சேரி ஆதார வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சுகாதார வழிகாட்டல்களை மீறுவோருக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 24

கோவிட் சுகாதார வழிகாட் டல்களை மீறுவோருக்கு எதி ராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறும் நபர்களை கண்டறியும் நோக்கில் நேற்று முதல் மேல் மாகாணத்தில் விசேட சோதனை நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட உள்ள தாக பொலிஸார் அறிவித்துள்ள னர்.

பொது இடங்களில் முகக் கவசம் அணியாமை, சமூக இடைவெளி பேணாமை குறித்து கண்காணிக்கப்பட உள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.

பொதுப் போக்குவரத்து சேவைகள், பொது இடங்கள் என்பனவற்றில் சுகாதார வழி காட்டல்களை பின்பற்றத் தவ றும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது

## பொருளாதாரம் தொடர் வீழ்ச்சி கண்டால் அரசுக்கு எதிராக மக்கள் திரண்டெழுவர்!

### அரச தரப்பு எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு, நவ. 24

நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந் தால், அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் முன்நோக்கி வருவது நிச்சயம் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன எச்சரித்துள்ளார்.

அரசாங்கம் குறித்து மக்கள் மத்தியில் மகிழ்ச்சியில்லை. கட்சி என்ற வகையில் முன் நோக்கிச் செல்லவேண்டும் என்பதற்காக அனைத்தையும் அமைதியாக வேடிக்கை பார்த் துக்கொண்டிருப்பதாகவும் செனவிரத்ன குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கட்சியின் தலைவர்கள் நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு காண ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எதனையும் கலந்தாலோசிப்பதில்லை என் றாலும் நாட்டுக்கு நல்லது நடக்குமாயின் அது எனக்கு பிரச்னையில்லை.

அரசாங்கம் மீது மக்கள் மிகப் பெரிய அதிருப்தியில் இருக்கின்றனர். அரசாங்கத்தின் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தி யைப் பயன்படுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியால் மக்களிடம் சென்றடைய முடியாது.

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு, ஆட்சிக்கு வரலாம் என சஜித் பிரேமதாஸ காணும் கனவும் வெறும் கனவு மாத்திரமே-என்றார். (அ)

# ஜனநாயகத்துக்கு தகுதி வாய்ந்ததாக பாடத்திட்டங்கள் அமைந்துள்ளதா?



ஷாமலா குமார்

> **வேறு கல்வி முறைகள் கொண்டிராத பல வாய்ப்புக்கள் எமது கல்வி முறையில் உண்டு. எனினும் உலக வங்கியின் கோட்பாடு மற்றும் துடிப்பான கல்வி முறையை அச்சுறுத்தலாகக் கருதும் ஆட்சியாளர்களால் நாம் முடக்கப்படுகின்றோம்.**

எமது நாடானது கட்டியெழுப்பப்பட்டு, தற்போது நிலவி வரும் பல்வேறு நெருக்கடிகளை வெற்றிகரமாகத் தாண்டுவதற்கு அதன் சட்டம், பொருளாதாரம், மற்றும் பொது நிறுவனங்களில் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட வேண்டும். இதற்குத் திறவுகோலாக இருப்பது கல்வி. கல்வியும் ஜனநாயகமும் ஒன்றிலிருந்தொன்று உருவாவதோடு அவை இரண்டும் ஒன்றையொன்று மேம்படுத்துகின்றன. ஜனநாயகத்துடன் கூடிய கட்டமைப்புக்கள் கல்விக்குக் களமமைக்கின்றன. இதனூடாக எமது பொதுவானதும், வேறுபடுவதுமான யதார்த்தங்களை எம்மால் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

உண்மைகளைத் தேடுவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், வெளிப்படுத்துவதற்கும் எம்மைத் தூண்டுவதனூடாகக் கல்வியானது எமது சுகாதாரம், உணவு, தொழில்நுட்பம், வாழ்க்கைமுறைகள், நல்வாழ்வு என எமது நாளாந்த நடைமுறைகளைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. இவ்வாறான ஒரு அணுகுமுறையானது இயல்பாகவே எமது நிறுவனங்கள், கட்டமைப்புக்கள், நடைமுறைகளை விமர்சிப்பதோடு, இந்த நோய்த்தொற்று நிலைமை சார்ந்தோ சாராமலோ அனைவருக்கும் முடிந்தளவு சம பிரதிநிதித்துவத்தை வழங்குகின்றது. இவ்வாறு திடமான ஒரு கல்வி முறையினின்றும் எழும் தீர்வுகளும் பதில்களும் ஜனநாயகத்துடன் கூடியதாக அமைகின்றன. இதனால் கல்வியோ ஜனநாயகமோ தனித்து இயங்க முடியாதென்பது தெளிவாகின்றது.

இங்கு கல்வி என நான் குறிப்பிடுவது இலவசக் கல்வியையாகும். கட்டணம் அறவிடும் கல்வி முறைகள் அனைத்தும் வெறும் அடக்குமுறையான செயற்பாடுகளே. கட்டணம் அறவிடும் கல்வி முறையானது மக்கள் பணத்தால் தக்கவைக்கப்படும் ஒரு வேடதாரி எனக் குறிப்பிட்டால் மிகையாகாது. இன்றைய "கல்வியானது" வேலை ஒன்றைப் பெறுவதற்கான தகைமைப் பயிற்சியையோ, இராணுவ முறைப்படியான கட்டுப்பாட்டொழுக்கத்தையோ சுட்டி நிற்கின்றது. இன்னும் சில சமயங்களில் எம்மில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து எம்மைக் கவர்ச்சிகரமாகவோ, வேலைக்கமர்த்தக் கூடிய தகைமை இருப்பது போன்றோ காட்டுவதற்காக ஒரு ஆடையை வாங்குவது போல் ஆற்றல்களையும் வாங்கக்கூடிய சந்தையாகக் கல்வி காணப்படுகின்றது.

அரசியல்வாதிகள், பெருநிறுவனங்கள், உலக வங்கி போன்றவற்றைப் பொறுத்த வரையில் கல்வியானது உலகப் பொருளாதாரத்துக்குப் பணியாட்களை உருவாக்கும் ஒரு கருவி மட்டுமேயாகும். அதாவது நாடுகளின் திறைசேரிகளை நிரப்புவதற்காகப் பொது மக்களின் எதிர்காலம் பற்றிய கவலைகளையும் அச்சங்களையும் நாணயமாக்கும் பயனுள்ள ஒரு யுத்தியாகக் கல்வியை அவர்கள் பார்வையிடுகின்றனர். சுருக்கமாகக் கூறப்போனால் கல்வியானது பணம் படைத்தவர்களுக்கான தனிச் சலுகையாகவும், அதிகாரம் மிக்கோரது மூலதனமாகவும் மாறிவிட்டது. கல்வியும் ஜனநாயகமும் இவ்வாறு தொடர் பிழந்து காணப்படுவது கவலைக்குரியது.

**கல்வி**

காலப்போக்கில் கல்வியானது மெல்லத் தேய்வுற்றுத் தற்போது பொது மக்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் கட்டணம் அறவிடும் கல்விமுறையை இலகுவாக ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. உதாரணமாகக் கல்வியின் கிடைப்பனவு சமத்துவமற்றுக் காணப்படுவது இன்று ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகவுள்ளது. கோவிட் நோய்த்தொற்று நிலையால் நாடு பாதிப்புற்றிருக்கையில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உள்ளடக்கப்படாத போதும் நிகழ்நிலைக் கல்வியானது முன்னேற்றத்தை நோக்கிய ஒரு படியாகவே அங்கீகரிக்கப்பட்டது. தற்போது ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் கல்வி என்ற பெயரில் கட்டணம் அறவிடும் கற்கை நெறிகளுக்கு வழிகோலும் கருவியாகக் கொத்தலாவல சட்டம் காணப்படுகின்றது. கட்டணங்களும் நுழைவுக்கான தகைமைகளும், அவற்றைச் செலுத்த முடியாத அல்லது சந்திக்க முடியாத மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்குக் கல்விக்கான வாய்ப்பினை மேலும் சிக்கலாக்குகின்றன. இது போன்றே சில பல்கலைக்கழகங்களிலும் கட்டணம் அறவிடும் கற்கை நெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கட்டணம் அறவிடும் அரச கல்வியானது நிறுவனமயமாக்கப்படுகின்றது.

வேறு பல முறைகளிலும் கல்வியானது இலவசமற்றதாகவே காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்கள் மாணவர் ஒன்றியங்களைத் தடை செய்துள்ளதோடு, பல்கலைக்கழக வளாகத்துக்குள் இடம்பெறும் கல்விச் சீர்திருத்தங்களுக்கெதிரான போராட்டங்கள் கூட பொலிஸாரால் முடக்கப்படுகின்றன. நிகழ்நிலைக் கல்வியை எதிர்க் கேள்வி கேட்பதற்கான சந்தர்ப்பங்களோ ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கிடைப்பது அரிது. பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பகிடிவதை மற்றும் பாலியல் வன்முறைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆகவே எமது நாடானது உண்மைக் கல்வியிலிருந்து, கல்வியெனும் வேடத்தை நோக்கி நகர்வதுடன் ஜனநாயகத்திலிருந்தும் விலகிச் செல்கின்றது.

**மீண்டும் உண்மைக் கல்வியை நோக்கி**

உண்மைக் கல்வியிலிருந்து கல்வி நிறுவனங்களை மேலும் அப்பால் கொண்டு செல்லும் சீர்திருத்தங்களுக்கு உலகத்தின் போக்குகளைக் காரணம் காட்டுகின்றார்கள். எமது இலவசக் கல்வி முறையின் ஆரம்பத்தை நோக்குவோம். அது எமது நாட்டின் தேவைகளை ஆராய்ந்து அதற்கேற்ப அமுல்படுத்தப்பட்ட ஒரு முரண்பாடான, எமது பிரச்னைகளுக்கான தீர்வினை மையமாகக் கொண்ட புரட்சிக் கோட்பாடேயன்றி வெளியுலக நடைமுறைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டதொன்றல்ல. இது உலக நடைமுறைகளுக்கு மாறாக, நாட்டு மக்களுக்காக, ஜனநாயக ரீதியில் கொண்டுவரப்பட்டதோர் கொள்கையாகும்.

வேறு கல்வி முறைகள் கொண்டிராத பல வாய்ப்புக்கள் எமது கல்வி முறையில் உண்டு. எனினும் உலக வங்கியின் கோட்பாடு மற்றும் துடிப்பான கல்வி முறையை அச்சுறுத்தலாகக் கருதும் ஆட்சியாளர்களால் நாம் முடக்கப்படுகின்றோம். கட்டணம் அறவிடும் கல்வி முறையால் பலன் பெறக் காத்திருக்கும் தனியார் துறை மறுபுறம். உலகத்தின் போக்குகள், உலக வங்கி, அரசியல்வாதிகள், மற்றும் வியாபாரிகளை ஒரு கணம் மறப்போமேயானால் இலவசக் கல்வியின் தாற்பரியம் புலப்படும்.

எமது பாடசாலை மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்களும் உட்கட்டமைப்புகளும் தீர்க்கமானவை. கோட்பாட்டளவில் கட்டுப்படியாகும் தன்மை மீது தங்காமல் எந்தவொரு மாணவனாலும் மூன்றாம் நிலைக் கல்வியைப் பெற முடியும். எமது பல்கலைக்கழகங்களும் ஈட்டும் வருமானத்திலோ, நன்கொடை நிதியிலோ பாரியளவு தங்கியிருப்ப தில்லை. அத்துடன் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய, தர்க்க ரீதியான, ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கங்களை எதிர்க் கேள்வி கேட்கும் ஒரு ஜனநாயக முறைக்கேற்ற கற்கை நெறிகளை உருவாக்குவதற்குக் கணிசமானளவு சுதந்திரம் அவற்றுக்குண்டு.

இக் கல்வி முறையானது பல ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட் டுள்ளதுடன், பாடசாலை முறையும் வெறுமையாக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவோரைத் தீர்மானிப்பதில் தனியார் வகுப்புக்கள் பாரிய செல்வாக்குடையவையாக உள்ளன. இந்த நோய் நிலைமைக்குப் பின் வரும் காலங்களில் இச் செல்வாக்கானாது மேலும் அதிகரிக்கும் சாத்தியக்கூறு உள்ளது. ஆசிரியர் பயிற்சித் திட்டமானது மாற்றியமைக்கப்பட்டு, முறையாக்கப்பட்டு, புதுப்பிக்கப்படல் வேண்டும். ஆசிரியர்களின் சேவைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதை ஒழிக்கப்பட்டு, சுதந்திரமாக கருத்து வெளியிடக்கூடிய, ஆடை அணியக்கூடிய, சிந்திக்க மற்றும் விரும்பியவாறு வழிபடக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். அத்தோடு அவை பெண்கள், சிறுபான்மையினர், வலது குறைந்தோர், மற்றும் LGBTIQ சமூகத்தைச் சார்ந்தோரை ஏற்றுக்கொள்ளவும் மதிக்கவும் வேண்டும். ஒருவரது குடும்ப வருமானமோ, இனமோ, வர்க்கமோ இங்கு எவ்வித செல்வாக்குமற்றிருக்க வேண்டும். இறுதியாக எமது பாடத்திட்டங்கள் ஜனநாயகத்திற்குத் தகுதி வாய்ந்ததாக, உண்மையில் இலவசமாக அமைய வேண்டும். இவை கடினமானவையாக இருப்பினும் கட்டாயமானவை.

**முடிவுகள்**

கல்வியும் ஜனநாயகமும் ஒன்றிலொன்று தங்கியிருப்பவை. இன்றைய கல்வி நிலையானது எமது ஜனநாயகத்தை எதிர்க் கேள்வி கேட்கத் தூண்டியுள்ளது. ஜனநாயகத்திற்கெதிராகப் பிரசாரம் செய்வோர் தேர்தல்களில் வெற்றி பெற இது வழிவகுத்துள்ளது. கல்வியை வலுப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் ஜனநாயகமயமாக்கலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இது போலவே ஜனநாயகமயமாக்கலை நோக்கிய எந்தவொரு முயற்சியும் கல்வியின் மறுசீரமைப்பை மையமாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் காண விரும்பும் ஓர் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு எமது சர்வாதிகார அரசாங்கங்கள் திராணியற்றுக் காணப்படுகின்றன. ஆகவே ஜனநாயகத்தை உன்னிப்பாக நோக்க வேண்டியது எமது கடமையாகின்றது.

**எழுத்தாளர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்.**

**மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**



# மீண்டும் ஜனாதிபதியாக ஜின்பிங் உலக நாடுகள் அஞ்சுவது ஏன்?

ரா.அரவிந்தராஜ்

**மாவோவுக்குப் பிறகு சீனாவின் சக்திவாய்ந்த தலைவராக உருப்பெற்றிருக்கிறார் ஜி ஜின்பிங். பொதுவாக, சீனாவைப் பொறுத்தவரை அங்கு ஒருவர், இரு முறை மட்டுமே ஜனாதிபதி பொறுப்பு வகிக்க முடியும் என்றிருந்த நிலையில், ஜி ஜின்பிங்குக்கு மட்டும் இது எப்படிச் சாத்தியமானது?**

சீன அரசியல் வரலாற்றிலேயே முதன்முதலாக தொடர்ந்து மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார் ஜி ஜின்பிங். கடந்த வாரம் நடைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் அதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மாவோவுக்குப் பிறகு சீனாவின் சக்திவாய்ந்த தலைவராக உருப்பெற்றிருக்கிறார் ஜி ஜின்பிங். பொதுவாக, சீனாவைப் பொறுத்தவரை அங்கு ஒருவர், இரு முறை மட்டுமே ஜனாதிபதி பொறுப்பு வகிக்க முடியும் என்றிருந்த நிலையில், ஜி ஜின்பிங்குக்கு மட்டும் இது எப்படிச் சாத்தியமானது?

சீனா, தனது புவி ஆதிக்க அரசியலாலும், பொருளாதாரப் போட்டி அரசியலாலும் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகளையே ஆட்டம்காணச் செய்துவருகிறது. இன்றைய சூழலில், சீனாவைத் தவிர்த்து உலக அரசியலைப் பேச முடியாத அளவுக்கு அரசியல், வணிகம், தொழில்நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் டிராகன் கரங்கள் அழுத்தமாகப் பதிந்திருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் முக்கியக் காரணமாக முன்னிறுத்தப்படும் நபர் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்.

2013 இல் ஜி ஜின்பிங் முதன்முறையாக சீன ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்டது முதலே நாட்டின் சட்ட திட்டங்களில், பொருளாதாரக் கொள்கைகளில் ஏராளமான மாற்றங்களைக் கொண்டுவந்தார். கம்யூனிசக் கோட்பாட்டு ரீதியாகவும் ஹசீனப் பண்புகளுடன் கூடிய சோஷலிசம்' என்ற புதிய கருத்தாக்கத்தைப் புகுத்தினார். உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டு முதலீடு, தனியார் துறைகளுக்கு சுதந்திரம், உலக வர்த்தகத் தொடர்பு என அத்தனை கூறுகளிலும் வளர்ச்சிக்கான மாற்றங்களை அறிமுகப்படுத்தினார். அமெரிக்காவின் நேரடிப் போட்டியாளராக சீனா வளரத் தொடங்கிய நிலையில், 'அடுத்த 30 ஆண்டுகளில் சீனா உலக வல்லரசாகும்' என்று தீர்க்கமாகக் கூறினார் ஜி ஜின்பிங்.

இன்னொரு பக்கம் ஹொங்கொங் போன்ற உள்நாட்டில் நடக்கும் ஜனநாயக உரிமைப் போராட்டங்கள் இரும்புக்கரம்கொண்டு ஒடுக்கப்பட்டன. சீனா, தன் எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் அண்டை நாடுகளுடன் எல்லைப் பிரச்னையைத் தீவிரமாக்கியது. இராணுவ அடக்குமுறைகளைக் கொண்டும், அடைக்க முடியாத அளவுக்கு கடன்களைக் கொடுத்தும் தெற்காசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை பலப்படுத்தியது. இதனால் இந்தோ-பசிபிக் பிராந்தியமே பதற்றமான சூழலுக்குள் தள்ளப்பட்டது.

மறுபுறம் பெரும்பாலான சீன மக்களிடமும், சீன கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஜி ஜின்பிங்கின் செல்வாக்கு உயரத் தொடங்கியது. தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாகவும் ஜி ஜின்பிங்கே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சீனாவில் "ஒருவர் இரண்டு முறை (பத்தாண்டுகள்) மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும்" என்கிற நூற்றாண்டுக்கால சீன கம்யூனிஸ்ட் கட்சியின் விதிமுறை மாற்றப்பட்டு, 2018இல் நடந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 19 ஆவது மாநாட்டில் புதிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. கூடவே, ஜி ஜின்பிங்கின் "புதிய சகாப்தத்துக்கான சீனப் பண்புகளுடன் கூடிய சோஷலிசம்" என்னும் சித்தாந்தம் சேர்க்கப்பட்டது. அப்போதே, இந்தச் சட்ட திருத்தம் ஜி ஜின்பிங் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கான முன்னேற்பாடாகவே கருதப்பட்டது.

**சீனா, தனது புவி ஆதிக்க அரசியலாலும், பொருளாதாரப் போட்டி அரசியலாலும் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகளையே ஆட்டம்காணச் செய்துவருகிறது.**

இந்த நிலையில்தான், கடந்த வாரம் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு மாநாடு தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றது. இதில் கட்சியின் உயர்நிலைப் பொறுப்பில் இருக்கும் 400 தலைவர்கள் கலந்துகொண்டனர். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டில், பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஜி ஜின்பிங்கை மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகத் தொடர வழிசெய்யும் 14 பக்க தீர்மானம் அதில் ஒன்று. அதாவது, '2022இல் நடைபெறவிருக்கும் கட்சியின் 20ஆவது தேசிய மாநாட்டில், ஜி ஜின்பிங்கை மூன்றாவது முறையாக சீன ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பது அவருக்குச் சிறப்பு கூடுதல் அதிகாரத்தை வழங்குவது' உள்ளிட்ட தீர்மானங்க ளுக்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

ஏற்கெனவே, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர், மத்திய இராணுவ ஆணையத்தின் தலைவர், நாட்டின் ஜனாதிபதி ஆகிய மூன்று முக்கிய அதிகாரங்களில் அமர்ந்திருக்கும் ஜி ஜின்பிங், தற்போது மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படவிருப்பதன் மூலம் மாவோவுக்குப் பிறகான சக்தி வாய்ந்த சீனத் தலைவராக உருவெடுத்திருக்கிறார். ஜி ஜின்பிங், தனது ஆயுள் காலம் வரைக்கும் சீனாவின் ஜனாதிபதியாக நீடிப்பார் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரங்கள் கூறினாலும், அரசியலில் எதுவும் எப்போதும் மாறலாம் என்பதே நிதர்சனம்!

### உலக நாடுகள் அஞ்சுவது ஏன்?

கொரோனா வைரஸ் மர்மம், தாய்வான் சிக்கல், ஆஸ்திரேலியாவுக்கு மிரட்டல், தாலிபன்களுக்கு ஆதரவு, பாகிஸ்தானுக்குப் போர்க்கப்பல் வழங்குதல், இந்திய எல்லையில் படைகளைக் குவிப்பது, புதிய கிராமங்களை உருவாக்குவது, தென்சீனக்கடல் தீவுகளில் இராணுவத் தளங்கள் அமைத்தல், அமெரிக்காவுடன் பனிப்போர் என சமீபகாலமாக சீனாவின் ஆதிக்கச் செயல்பாடுகள் பன்மடங்காக அதிகரித்துவருகின்றன.

இந்த நிலையில், மீண்டும் ஜி ஜின்பிங் சீனினாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் பிரச்னைகள் இன்னும் தீவிரமாகும் என சீனாவால் பாதிக்கப்பட்ட நாடுகள் அஞ்சுகின்றன. நவம்பர் 15 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், காணொலி மூலம் சீன ஜனாதிபதி ஜின்பிங்கிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். இதில் இரு நாட்டு உறவுகள், சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. குறிப்பாக, 'தாய்வானின் தற்காப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா ஆதரிக்கிறது. அதேபோல், அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே போட்டிகள் இருக்கலாம் ஆனால் அது ஒருபோதும் மோதலாக மாறிவிடக் கூடாது' என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருக்கிறார். மேலும், கிளாஸ்கோ-காலநிலை மாற்ற கூட்டத்திலும், ரோம் ஜி 20 மாநாட்டிலும் சீனா கலந்துகொள்ளாததற்கு பைடன் தனது கண்டனத்தையும் பதிவு செய்திருப்பதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கூறியிருக்கிறார். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி






மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

### வினாத்தாள் - 1 விடைகளும் புள்ளித்திட்டமும்

40 x 2.5 =100

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | (1) |  | 21 | (3) | புலி, சேவல் |
| 2 | (3) |  | 22 | (2) |  |
| 3 | (2) |  | 23 | (2) |  |
| 4 | (3) |  3) | 24 | (2) | வடக்கு |
| 5 | (2) | 21 | 25 | (3) | $\frac{1}{4}$ |
| 6 | (3) | 8 மணித்தியாலங்கள் | | | ஏனையவை இரண்டும் சிவப்பு நிறமல்லாதவையாகும் |
| 7 | (1) | 11 | 26 | (2) | |
| 8 | (3) | 12 \| 8 \| 3 \| 3 \| 4 | 27 | (3) | 5 |
| 9 | (2) | சிறியது : அழுகை : அண்மை | 28 | (1) | 6 |
| 10 | (3) | 10 | 29 | (2) | A , F |
| 11 | (1) | 8 | 30 | (1) | C , F , B |
| 12 | (3) | 13 | 31 | (3) | 3 |
| 13 | (3) | 51m | 32 | (2) | 54 செக்கன்கள் |
| 14 | (1) | 8 | 33 | (1) | 5 |
| 15 | (2) |  | 34 | (3) | 22 |
| 16 | (1) | புயம் | 35 | (1) | 5 |
| 17 | (3) | மார்க்கம் | 36 | (3) | A,F |
| 18 | (3) | மொத்த மாணவர்களில் 3/8 பங்கினர் நடந்து செல்கின்றனர். | 37 | (2) | ஏப்ரல் |
| 19 | (3) | 9 | 38 | (3) | 252 , 432 |
| 20 | (3) | 10 | 39 | (3) | 312 , 182 |
| | | | 40 | (2) | 100 நிமிடம் |

### வினாத்தாள் - II விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) | (i) | விவசாயிகள் | 1 புள்ளி |
| | (ii) | பள்ளி | 1 புள்ளி |
| | (iii) | வியாபாரிகள் | 1 புள்ளி |
| | (iv) | விறுவிறு | 1 புள்ளி |
| | (v) | விவசாயிகள் / வியாபாரிகள் / மாணவர்கள் / ஊழியர்கள் | 1 புள்ளி |
| | (vi) | வண்ண வண்ண | 1 புள்ளி |
| 02) | (i) | வளி | 1 புள்ளி |
| | (ii) | ஒளி | 1 புள்ளி |
| | (iii) | வாண | 1 புள்ளி |
| 03) | (i) | முச்சாணும் | 1 புள்ளி |
| | (ii) | கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும் | 1 புள்ளி |
| 04) | (i) | சம்பிரதாயம் | 1 புள்ளி |
| | (ii) | கலாசாரம் | 1 புள்ளி |
| 05) | | வட்டம் | 1 புள்ளி |
| 06) | (i) | அலப்பும் | 1 புள்ளி |
| | (ii) | கதிர் | 1 புள்ளி |
| 07) | | அளகு | 1 புள்ளி |
| 08) | (i) | பதிப்புரை | 1 புள்ளி |
| | (ii) | பவளவிழா | 1 புள்ளி |
| 09) | (i) | தேயிலை + நீர் | 1 புள்ளி |
| | (ii) | நெல்வயல் | 1 புள்ளி |
| 10) | | நிமிர்ந்து | 1 புள்ளி |
| 11) | (i) | ஆந்தை | 1 புள்ளி |
| | (ii) | சீப்பு | 1 புள்ளி |
| 12) | (i) | Pineapple | 1 புள்ளி |
| | (ii) | Fish | 1 புள்ளி |
| 13) | (i) | I have one brother | 1 புள்ளி |
| | (ii) | My cat likes milk | 1 புள்ளி |
| 14) | திறவுங்கள் | | 1 புள்ளி |
| 15) | சீயலா இன்னவா | | 1 புள்ளி |
| 16) | (i) | 30568 | 2 புள்ளிகள் |
| | (ii) | 30000 | 2 புள்ளிகள் |
| 17) | 64 | | 2 புள்ளிகள் |
| 18) | 2 | | 2 புள்ளிகள் |
| 19) | 245 | | 2 புள்ளிகள் |
| 20) | (i) | மு.ப 11.45 | 2 புள்ளிகள் |
| | (ii) | 14:30 | 2 புள்ளிகள் |
| 21) | XIV | | 2 புள்ளிகள் |
| 22) | 0.4 | | 2 புள்ளிகள் |

ஈழநாடு

# பிரச்னைகளை மூடிமறைப்பதற்கு இனவாதத்தை தூண்டுகிறது அரசு



## பாராளுமன்றத்தில் சஜித் கடும் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

**நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்றும், ஆனால் அரசாங்கமோ பிரச்னைகளை மூடி மறைப்பதற்காக இனவாதத்தைத் தூண்டுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 7 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதன்போது மேலும் கூறுகையில்,

"கொவிட் தொற்று நிலைமைக்கு பின்னர் நாட்டில் வறுமை நிலைமை உருவாகியுள்ளது. அரசாங்கத்தின் திட்டமிடப்படாத பொருளாதார முகாமைத்துவமே இந்த புதிய வறுமைக்கு காரணமாகியுள்ளது. வருமான ரீதியான வறுமை, உணர்வுரீதியான வறுமை, நாட்டில் பெரும்பாலானவர்கள் மந்த போசன நிலை உருவாகி அதனால் ஏற்பட்டுள்ள வறுமை நிலை ஆகியன தற்போது தேசிய பிரச்னையாகி உள்ளன.

எமது அரசாங்கத்தின் காலத்தில் உலக வங்கியானது ஜனசவிய திட்டத்திற்கு மட்டுமே நிதி வழங்கியது. இத்தகைய வேறு எந்த திட்டங்களுக்கும் அந்த வங்கி நிதி வழங்கியதில்லை. அந்தளவு அந்த திட்டம் மிக சிறப்பான வறுமை ஒழிப்புக்கான திட்டமாக இருந்தது.

இதேவேளை, பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. நாட்டின் வருமானம் குறைவடைந்துள்ளது. வருமானத்தை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை. அடுத்த வருடத்துக்கு மொத்தமாக 6721 மில்லியன் டொலர் கடன் செலுத்த வேண்டி இருக்கின்றது. அடுத்துவரும் ஒன்றரை மாதத்துக்கே அந்நிய செலாவணி இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் எவ்வாறு முகம்கொடுப்பது. மக்கள் தாக்க முடியாத பொருளாதார பிரச்னைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு. மக்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்க வேண்டிய நிலை. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நிலையான தீர்மானத்துக்கு வரவேண்டும்.

அதனால் அரசாங்கம் தொடர்ந்தும் தடுமாறிக்கொண்டிருக்காமல் விரைவாக எடுக்க வேண்டிய தீர்மானங்களுக்கு செல்லவேண்டும். அதற்காக சர்வதேச நாணய நிதியங்களுடன் கலந்துரையாடவேண்டும். அதன்போது எமது தனித்துவத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எமது கடன்களை மீள் கட்டமைப்பு செய்யவேண்டும். அதற்காக நாங்களும் உதவ தயாராக இருக்கின்றோம்.

நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கக்கூடிய சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதனால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு எந்த நிவாரணமும் இல்லை. அதனால் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் வரவு - செலவு திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும்.

எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும். ஆனால், ஒரே நாடு - ஒரே சட்டத்தை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் நாட்டில் இருக்கும் பிரச்னைகளை மறைப்பதற்கு இனங்களுக்களுக்கிடையில் பிரச்னைகளை ஏற்படுத்தி வருகின்றது.

"ஒரே நாடு - ஒரே சட்டம்" தொடர்பான செயலணியை அமைத்து ஒரு சமூகத்தை முற்றாக புறக்கணித்திருக்கின்றது. நாட்டுக்குள் பாரிய அழிவை ஏற்படுத்தவா அரசு முயற்சிக்கின்றது? இனங்களுக்கிடையில் பிரச்னையை ஏற்படுத்திக்கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது" - என்றார். (இ)

# புலம்பெயர் தமிழர்களால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியும்

## சபையில் சார்ள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு. நவ. 24

"வருமானத்தில் மிகவும் பலம் பெற்றவர்களாகவுள்ள புலம்பெயர் தமிழர்களால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியும்" தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன்," அரச ஊழியர்கள் நாட்டுக்குச் சுமை என்று அரசு கூறுகின்றது. ஆனால், பாதுகாப்புப்படைகளே இந்த நாட்டுக்கு பெரும் சுமை" என்றும் குறிப்பிட்டார்.

"பயங்கரவாதத் தடைச் சட்டமே வெளிநாட்டிலுள்ள முதலீட்டாளர்கள் முதலீடு செய்யத் தடையாக உள்ளது. குறிப்பாக உலக நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்கள் சொந்த மண்ணில் அதிக பற்றுக்கொண்டவர்கள். அவர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்தால் அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பதும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு அழைத்துப் பயமுறுத்துவதும் அவர்களுடைய முதலீட்டைத் தடுக்கின்றது" எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

"இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கொரோனாத் தொற்று ஒரு காரணமாக இருந்தாலும் கூட நாட்டின் தவறான பொருளாதாரக் கொள்கையும் முகாமைத்துவமுமே பிரதான காரணமாகும். இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தமது வருமானத்தையும் மீறி பாதுகாப்புக்காக மிகப் பெரிய தொகையை ஒதுக்குவதே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் 2010ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டுவரை பாதுகாப்புக்குப் பல கோடிக் கணக்கான ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரச சேவையாளர்கள் நாட்டுக்குச் சுமையென அரசு கூறுகின்றது. ஆனால், பாதுகாப்புப் படைகளே இந்த நாட்டுக்குப் பெரும் சுமை.

ஆட்சியாளர்கள் தமது ஆட்சியைத் தக்கவைக்க இராணுவ ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவும், அவர்களின் வாக்கு வங்கியைத் தக்கவைக்கவுமே பாதுகாப்புப் படைகளுக்கு இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். அரச சேவையில் நிபுணத்துவ அதிகாரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை நியமிக்கின்றனர். இதனால் அரச அதிகாரிகள் பலர் இராஜினாமா செய்கின்றனர்.

இலங்கைக்கு வருமானத்தைத் தருகின்ற சுற்றுலாப் பயணிகள் மிக முக்கியமானவர்கள். இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வருபவர்களில் 50 வீதமானவர்கள் வடக்கு, கிழக்கின் புலம்பெயர் தமிழர்கள் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். வருமானத்தில் மிகவும் பலம் பெற்றவர்களாகவுள்ள புலம் பெயர் தமிழர்களால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியும்.

அதேபோல் வடக்கு, கிழக்கு மீனவர்கள், விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருட்களின் விலை யேற்றம் காரணமாக மக்கள் பதற்றமான சூழலில் உள்ளனர். தமிழர்களின் இருப்பை அழிக்க அரசு சிங்களக் குடியேற்றங்களை தமிழர் பகுதிகளில் அவசர அவசரமாக முன்னெடுத்து வருகின்றது" - என்றார். (இ)

# நாட்டில் ஏன் இரு சட்டங்கள்?

## அரசிடம் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கேள்வி

கொழும்பு, நவ. 24

மஹிந்த ராஜபக்ஷ கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை மீறியே நடைபெற்றது எனக் குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி. முஜிபுர் ரஹ்மான், நாட்டில் ஏன் இரு சட்டங்கள்? எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயிடம் கேள்வி எழுப்புகையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டிய முஜிபுர் ரஹ்மான், மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டங்களுக்கு வந்தவர்கள் பொலிஸாரால் திருப்பியனுப்பப்பட்டனர். நாட்டின் தற்போதைய நிலையில் போராட்டங்களை நடத்தி மக்களை ஒன்றுகூடச் செய்வதால் கொரோனா வைரஸ் பரவும் என விளையாட்டுத்துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு இரு நாட்கள் முன்பாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக்கத்தால் புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல் வெளியிடப்பட்டிருந்தது. இதில், விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியும்.




ஆனால், விளையாட்டுப் போட்டிகளை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது

ஆனால், கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் அரங்கில் நடைபெற்ற மஹிந்த ராஜபக்ஷ கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதில் சுமார் 5 ஆயிரம் பார்வையாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, காலியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலங்கை - மேற்கிந்தியத் தீவுகளுக்கான டெஸ்ட் போட்டியைப் பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை. நாட்டில் ஏன் இரு சட்டங்கள்?

ஒருவேளை இந்தப் போட்டிக்கும் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணம் என்று பெயர் வைத்திருந்தால் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பார்களா?" என்று கேள்வி எழுப்பினார்.

எனினும், இந்தக் கேள்வி பொருத்தமற்றது எனக் கூறி பதில் வழங்க இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மறுத்துவிட்டார். (இ)


# மேலும் 4 இலட்சம் பைஸர் வந்தடைந்தன நாட்டுக்கு!

கொழும்பு, நவ. 24

மேலும் 4 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் நேற்று இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் இந்த வாரத்துக்குள் 19 இலட்சம் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதேவேளை, அடுத்த மாதம் முதல் வாராந்தம் தலா 30 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கப்பெறும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (இ)




# தென்கிழக்கு ஆசியாவின்மீது சீனா ஆதிக்கம் செலுத்தாது!

## ஜனாதிபதி ஜின்பிங் உறுதி

பீஜிங், நவ. 24

தென்கிழக்கு ஆசியாமீது சீனா ஆதிக்கம் செலுத்தாது என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அந்த நாடுகளுக்கு உறுதிளித்துள்ளார்.

ஆசியான் என்று அழைக்கப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்துக்கும், சீனாவுக்கும் இடையிலான 30 ஆண்டுகால உறவை குறிக்கும் வகையில் காணொலி காட்சி வாயிலாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்று பேசும்போதே ஜின்பிங் இவ்வாறு தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசியாவில் சீனா தனது அதிகாரத்தை விரிவுபடுத்த முயற்சித்து வருகிறது என்று இந்தப் பிராந்தியத்தில் சில நாடுகள் தொடர்ந்து கவலை தெரிவித்து வருகின்றன. குறிப்பாக தென்சீன கடல் விவகாரத்தில் சீனவுக்கும், பிராந்தியத்தின் சில நாடுகளுக்கும் இடையில் பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்நிலையிலேயே, தென்கிழக்கு ஆசியாமீது சீனா ஆதிக்கம் செலுத்தாது என்று கூறியுள்ளார். ஏனைய நாடுகள் மீது மேலாதிக்கம் செலுத்துவது மற்றும் அதிகார அரசியலை திணிப்பது போன்ற செயல்பாடுகளை சீனா உறுதியுடன் எதிர்க்கிறது. அயல் நாடுகளுடன் நட்புறவைப் பேண விரும்புகிறது. அத்துடன், பிராந்தியத்தில் நிலையான அமைதியை உறுதி செய்வதில் அயல் நாடுகளுடன் கூட்டிணைந்து செயல்படவே நாங்கள் விரும்புகிறோம்.

தென்கிழக்கு ஆசியாவில் ஆதிக்கம் செலுத்த சீனா ஒருபோதும் முயற்சி செய்யாது. சிறிய நாடுகளை கொடுமைப்படுத்தும் வகையான செயல்பாடுகளில் நாங்கள் ஒருபோதும் ஈடுபட மாட்டோம் - என்றும் கூறினார். (ஐ)




# காஷ்மீர் மனித உரிமை ஆர்வலர் பயங்கரவாத சட்டத்தின்கீழ் கைது!

ஸ்ரீநகர், நவ. 24

பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி அளித்த வழக்கில் இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல மனித உரிமை ஆர்வலர் குர்ரம் பர்வேஸ் என்பவரை புலனாய்வு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

காஷ்மீர் மாநில தலைநகர் ஸ்ரீநகரில் உள்ள அவரின் வீடு மற்றும் அலுவலகத்தில் திங்கட்கிழமை அதிகாலை இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போதே குர்ரம் பர்வேஸ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் காவல்துறை மற்றும் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் உதவியுடன் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மனித உரிமை ஆர்வலர் பர்வேஸ் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

குர்ரம் பர்வேஸ் மீது 2016 ஆம் ஆண்டு பொது பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் பங்கேற்க சுவிட்சர்லாந்து செல்ல தடை விதிக்கப்பட்ட ஒரு நாள் கழித்து அவர் கைது செய்யப்பட்டார். 76 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

பர்வேஸ், தன்னிச்சையாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு எதிரான ஆசிய கூட்டமைப்பின் தலைவராகவும், ஜம்மு காஷ்மீர் சிவில் சமூகத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார். 2004 பாராளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்கும் போது கண்ணிவெடியில் சிக்கி தனது காலை இழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பல்கேரியாவில் தீப்பற்றியது பஸ்; சிறுவர் உட்பட 45 பேர் எரிந்து பலி!

சோபியா, நவ. 24

பல்கேரியாவின் மேற்கு பகுதியில் நெடுஞ்சாலை ஒன்றில் பயணித்த பஸ் தீப்பற்றியதில் சிறுவர்கள் உட்பட குறைந்தது 45 பேர் உயிரிழந்தனர்.

உள்ளூர் நேரப்படி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02:00 மணிக்குப் பிறகு போஸ்னெக் கிராமத்திற்கு அருகே இந்த சம்பவம் நடந்ததாக உள்துறை அமைச்சு உறுதிபடுத்தியுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்களும் அடங்குவர் என அமைச்சு அதிகாரி நிகோலாய் நிகோலோவ், தனியார் தொலைக்காட்சி சேவை ஒன்றிடம் தெரிவித்தார். விபத்திலிருந்து 7 பேர் காப்பாற்றப்பட்டனர் என்றும் அவர் கூறினார்.



துருக்கியில் இருந்து வடக்கு மசிடோனியா நோக்கி பஸ் பயணித்ததாகத் தெரிய வருகின்றது. (ஐ)

# இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு; டானில் 41 பேர் உயிரிழப்பு

காட்டோர்ம், நவ. 24

சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக கடந்த ஒக்ரோபர் இறுதியிலிருந்து இதுவரை நடைபெற்ற போராட்டங்களில் 41 பேர் கொல்லப்பட்டனரென அந்நாட்டு மருத்துவர்கள் குழு தெரிவித்துள்ளது.

காயமடைந்த போராட்டக்காரர்கள் சிகிச்சை பெறுவதை இராணுவம் தடுத்ததாகவும், மருத்துவமனைகள் குறிவைக்கப்பட்டதாகவும் அந்தக் குழு குற்றம்சாட்டியது.

இது தொடர்பாக சூடான் மருத்துவர்கள் குழுவின் ஒருங்கிணைந்த அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பவை யாவன;

சூடானில் ஒக்ரோபர் 25ஆம் திகதி இராணுவ புரட்சி தொடங்கிய பின்னர், காயமடைந்த போராட்டக்காரர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்ற அம்புலன்ஸ்களை இராணுவம் தடுத்தது. அவசர சிகிச்சை பிரிவுக்குள் நுழைந்து பொலிஸார் நோயாளிகளை கைது செய்தனர். இரு மருத்துவமனைகளின் உள்பகுதியில் கண்ணீர்ப் புகை குண்டுகளையும் வீசினர்.

இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 41 பேர் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதவிநீக்கம் செய்யப்பட்ட பிரதமர் அப்துல்லா ஹோம் டோக்கை மீண்டும் பதவியில் அமர்த்த இராணுவம் ஞாயிற்றுக்கிழமை ஒப்புக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சுவீடனின் முதல் பெண் பிரதமராக மக்டலெனா தெரிவு செய்யப்படுவாரா?

## பாராளுமன்றில் இன்று வாக்கெடுப்பு

ஸ்டோக்ஹோம், நவ. 24

சுவீடனின் புதிய பிரதமரை தெரிவு செய்ய பாராளுமன்றத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. நாட்டின் முதல் பெண் பிரதமராக நிதிய மைச்சர் மக்டலெனா அண்டர்சன் தெரிவு செய்யப்படுவாரா என்பது அன்றைய தினம் தெரியவரும்.

சுவீடன் பிரதமராகவும், சமூக ஜனநாயக கட்சித் தலைவராகவும் இருந்த ஸ்ரெபான் லோப்வென் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்தார்.

இதையடுத்து, பிரதமர் பதவியை அவர் துறந்தார். அவருக்குப் பதிலாக கட்சித் தலைவராக நிதியமைச்சர் மக்டலெனா அண்டர்சன் தெரிவு செய்யப்பட்டார். இதையடுத்து பிரதமராக அவர் தெரிவு செய்யப் படுவதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற வேண்டும்.



349 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 175 பேரின் ஆதரவு அவருக்கு தேவைப்படுகிறது.

ஆளும் சமூக ஜனநாயக கட்சிக்கு இப்போது 100 உறுப்பினர்கள் உள்ளனர். அதன் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவையும் சேர்த்து 174 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. பெரும்பான்மைக்கு ஓரிடம் குறையும் நிலையில், எதிர்க்கட்சிகளின் பிளவால் மக்டெலனா அண்டர்சனுக்கு போதிய ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# 5-11 வயது சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் இஸ்ரேல்

ஜெருசலேம், நவ. 24

5 முதல் 11 வயது சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியை இஸ்ரேல் தொடங்கியுள்ளது.

இஸ்ரேலில் அதிவேகமாக தடுப்பூசியின் இரு டோஸ்களும் வேகமாக ஏற்றப்பட்டன. இதனால், தடுப்பூசிகளை பெற்றவர்கள் முகக் கவசம் அணிவது கட்டாயமல்ல என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், தற்போது அங்கு கொரோனா தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய அவசியமோ, உயிரிழப்போ ஏற்படாவிட்டாலும் கூட மூன்றாவது அலை பரவலின் வேகம் அந்நாட்டை கவலையடையச் செய்தது. இதனால், பூஸ்டர் தடுப்பூசி ஊக்குவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக இணை நோய் கொண்டோர், 60 வயதுக்கும் மேற்பட்டோருக்கு மூன்றாவது டோஸ் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டது. பின்னர் இது தகுதி வாய்ந்த அனைவருக்கும் நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில், 5 முதல் 11 வயது சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதை தொடங்கியுள்ளது இஸ்ரேல். (ஐ)

# மேற்கிந்தியா தடுமாற்றம் முன்னிலையில் இலங்கை!

## நேற்றைய ஆட்டம் மழையால் பாதிப்பு



காலி, நவ. 24

முதல் இனிங்ஸில் 162 ஓட்டங்களால் இலங்கை அணி முன்னிலையில் இருக்கிறது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 224 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இதேசமயம், போட்டியின் மூன்றாம் நாளான நேற்று ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி கடந்த திங்கட்கிழமை காலியில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இனிங்ஸில் 386 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கையின் பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறியது. இரண்டாம் நாள் முடிவின் போது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 113 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தடுமாறியது. அப்போது கைல் மேயர்ஸ் 22 ஓட்டங்கள், ஜசன் ஹோல்டர் 1 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று தொடங்கியபோது இருவரும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். இலங்கையின் பந்துவீச்சாளர்கள் இந்த இணையை பிரிக்க முடியாது தடுமாறினர்.

இந்த இணை இணைப்பாட்டமாக 63 ஓட்டங்களைப் பெற்றபோது கைல் மேயர்ஸ் 8 பௌண்ட்ரிகளுடன் 45 ஓட்டங்களை எடுத்தநிலையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஜசன் ஹோல்டர் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மீண்டும் தடுமாறியது மேற்கிந்தியத் தீவுகள் அணி. எனினும், டா சில்வா விக்கெட் வீழ்ச்சியை தடுக்கும் விதமாக தடுப்பாட்டத்தை ஆரம்பித்தார்.

மறுமுனையில் கோர்ன் வோல் 39 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அவர் ஆட்டமிழந்த நிலையில் மழை குறுக்கிட்டது. நீண்டநேரமாக மழை விடாததால் நேற்றைய நாள் ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 224 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்திருந்தது. டா சில்வா 70 பந்துகளுக்கு முகம் கொடுத்து 11 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார்.

இலங்கையின் பந்துவீச்சில், ரமேஷ் மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்கிரம ஆகியோர் தலா மூன்று விக்கெட்களையும், சுரங்க லக்மால், எம்புல்தெனிய, தனஞ்சய டி சில்வா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# மகளிர் ரென்னிஸ் தரவரிசை; ஆஷ்லே தொடர்ந்து முதலிடம்

லண்டன், நவ. 24

உலக மகளிர் ரென்னிஸ் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி தொடர்ந்து முதலிடத்தை தக்க வைத்துள்ளார். அத்துடன், ஸ்பெயின் வீராங்கனைகள் தரவரிசையில் முன்னேறியுள் ளனர்.

உலக ரென்னிஸ் சங்கம், மகளிருக்கான தரவரிசையை நேற்று வெளியிட்டது.

இதன்படி, ஆஷ்லே பார்டி 7,582 புள்ளிகளைப் பெற்று தொடர்ச்சியாக முதலிடத்தை தக்க வைத்துள்ளார். இந்த ஆண்டு முழுவதும் அவரின் ஆதிக்கம் தொடர்ச்சியாக உள்ளது.

இதேநேரம், பெலாரஸின் சபலென்கா 6,380 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலுள்ளார். ஸ்பெயினின் கார்பைன் முகுருசா 5685 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்துக்கு முன்னேறினார். மற்றொரு ஸ்பெயின் வீராங்கனையான படோசா புள்ளிப்பட்டியலில் முன்னேற்றம் கண்டு எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். (ஐ)



# நியூசிலாந்துடனான டெஸ்ட் கே. எல். ராகுல் விலகினார்!

புதுடில்லி, நவ. 24

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் தொடக்க வீரர் கே. எல். ராகுல் விலகியுள்ளார்.

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து அணி 3 இருபது-20 போட்டிகள், இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

இருபது - 20 தொடரை முழுமையாக இந்தியா வென்ற நிலையில் டெஸ்ட் தொடர் நாளை தொடங்குகிறது. முதல் போட்டியின் தலைவராக ரஹானே செயல்படுவார்.

இந்த நிலையில், டெஸ்ட் அணியின் தொடக்க வீரரான கே. எல். ராகுல் அணியிலிருந்து விலகியுள்ளார். காயம் காரணமாகவே அவர் முதல் டெஸ்டில் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவருக்கு பதிலாக சூரியகுமார் யாதவ் களமிறங்குவார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது. (ஐ)

# பங்களாதேஷூடனான ரி- 20 தொடர் பாகிஸ்தான் முழுமையாக வென்றது



டாக்கா, நவ. 24

பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியையும் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது. இதன் மூலம் 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரை பாகிஸ்தான் முழுமையாகக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத் தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 124 ஓட்டங்களை எடுத்தது. தொடக்க வீரரான முஹமட் நயீம் 47, சமீம் ஹூசைன் 22, அபிவ் ஹூசைன் 20 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் முஹமட் வசீம், உஸ் மான் காதிர் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்க வீரர் றிஸ்வான் 40 ஓட்டங்களை சேர்த்தார். மற்றைய தொடக்க வீரரான பாபர் ஆஸம் 19 ஓட்டங்களை பெற்றிருந்தார். ஹைதர் அலி 45 ஓட்டங்களை சேர்க்கவே 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப் புக்கு 127 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் மஹ்மதுல்லா 3 விக் கெட்களை வீழ்த்தினார்.

போட்டியின் நாயகனாக ஹைதர் அலியும், தொடரின் நாயகனாக முஹமட் றிஸ்வானும் தெரிவாகினர். (ஐ)

# அரபு எமிரேட்ஸின் ரி-20 தொடரில் ஐ. பி. எல். அணி உரிமையாளர்கள்!

டுபாய், நவ. 24

கொல்கத்தா நைற் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகளின் உரிமையாளர்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் புதிய இருபது - 20 தொடரின் உரிமையாளர்களாக அறிவிக்கப்படவுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியனத்தின் கிரிக்கெட் சபை தனக்கென ஓர் இருபது - 20 தொடரை தொடங்குகிறது. ஆறு அணிகள் கொண்ட இந்தத் தொடர் 2022 பெப்ரவரி - மார்ச்சில் விளையாடப்படவுள்ளது.

இந்தத் தொடர் குறித்து கடந்த ஒகஸ்ட் மாதம் அறிவிக்கப்பட்டது. இதில், ஐ. பி. எல். தொடரில் பங்கேற்கும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகளின் உரிமையாளர்களும் அணிகளை வாங்கவுள்ளனர்.

தவிர, இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைற்றெட் உதைபந்தாட்ட அணியின் உரிமையாளரும் அணி ஒன்றை பெறவுள்ளார். ஆறு அணிகளுக்குமான ஒப்பந்தங்களும் நிறைவடைந்துள்ளன என்று தெரிய வருகின்றது. (ஐ)

# நினைவேந்தலைத் தடுப்பதன் ஊடாக மாவீரரை தமிழர் மறக்கமாட்டார்கள்

## பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி. எடுத்துரைப்பு

கொழும்பு, நவ. 24

**"மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்னால் நீங்கள் படையினரைக் குவித்து நினைவேந்தலைத் தடுப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு தமது வீரப் புதல்வர்களை மறக்கும் சூழல் உருவாகிவிடுமா? அந்த நிலைமை ஒரு போதும் ஏற்படாது. மாவீரர்களைத் தமிழர்கள் ஒருபோதும் மறக்கவேமாட்டார்கள்."**



- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த நாட்டில் தமிழர்கள் வாழும் பகுதிகளில், போர்க் காலத்தில் உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களின் துயிலும் இல்லங்களுக்கு முன்னால் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றத் தடை உத்தரவுகளைப் பெறும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர். துயிலும் இல்லங்களை இடித்து, சப்பாத்துக் கால்களுடன் இராணுவம் நடமாடுகின்றது. துயிலும் இல்லங்களை இடிப்பதன் மூலம் தமிழ் மக்கள் தமது வீரப்புதல்வர்களை மறக்கக்கூடிய சூழல் உருவாகிவிடுமா?

2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை மாவீரர் நினைவேந்தலுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கு சிங்கள மக்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. ஒரு பேரணி கூட செல்லவில்லை.

எனவே, இலங்கை அமைதி பூங்காவாக மாறவேண்டுமானால் நினை வேந்தல் நடத்தும் உரிமைக்கு அனுமதி வழங்கும் அறிவிப்பை பகிரங்கமாக விடுக்கவும். அதை விடுத்து அடக்கி ஆள முற்பட்டால் அமைதி ஏற்படாது" - என்றார். (இ)

## பதுளையில் 7 நாளில் 16 பேர் உயிரிழப்பு!

பதுளை, நவ. 24

பதுளை பொது வைத்திய சாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, இந்த மாதம் 16ஆம் திகதியிலிருந்து இதுவரை சிகிச்சை பெற்று வந்த 16 பேர் உயிரிழந்தனர் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பதுளை கிளையின் தலைவர் பாலித ராஜபக்ச தெரிவித்தார்.

16ஆம் திகதி ஐவரும், 18ஆம் திகதி மூவரும், 21ஆம் திகதி ஐவரும், 22ஆம் திகதி மூவரும் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயிரிழந்தவர்கள் எல்ல, பதுளை, மடுல்சீமை, பண்டாரவளை, வெல்லவாய, ஹாலி - எல, மீகஹ்ஹிக்கவுல, வெலிமட, கந்தகெட்டிய, மஹியங்கனை, உடப்புஸல்லாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பதவிக்காக அரசின் கால்களை கழுவி அரசியல் நடத்தவில்லை

## டக்ளஸுக்கு சிறிதரன் பதிலடி

கொழும்பு, நவ. 24

"நான் அரசுக்கு வக்காளத்து வாங்கும் கையாள் அல்லன். பதவிக்காக ஆளுந்தரப்பின் கால்களைக் கழுவி பிழைக்கவும் வரவில்லை. எனவே, தயவு செய்து என்னைப் பேசவிடுங்கள்."

- இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சபையில் வைத்து பதிலடி கொடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறிதரன் எம்.பி. உரையாற்றும் போது அவருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் அவ்வப்போது வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் சிறிதரன் எம்.பியின் உரையை குறுக்கீடு செய்த டக்ளஸ்,

"மஹிந்த ராஜபக்ச காலத்தில் வடக்கு, கிழக்கில் அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளன என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். அதற்கு முன்னரும் நாம் செய்திருப்போம். ஆனால், நீங்கள் செய்யவிடவில்லை. பிரபாகரன் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டார். இது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அல்லது நீங்கள் மறைக்கலாம்" என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே பதவிகளுக்காகக் கால் கழுவிப் பிழைப்பதற்காகத் தான் அரசியல் நடத்தவில்லை என சிறிதரன் எம்.பி. குறிப்பிட்டார். (இ)

# இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை!

## அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு



கொழும்பு, நவ. 24

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்காக ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும், அதிக மழையால் பாதிக்கப்பட்ட மரக்கறிச் செய்கைக்காக விசேட உரத்தைக் கொண்டு வரவும் மற்றும் கிருமிநாசினிகளைக் கொண்டு வருவதற்குமே தீர்மானம்எடுக்கப்பட்டது என்றும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனச் செய்திகள் வெளியாகியமை தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்விகள் எழுப்பியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

ஜனாதிபதி, விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் உரம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் கேள்வி எழுப்பினர். இதன்போது பதிலளித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறுகையில்,

"இரசாயன உரத்தைக் கொண்டு வருவதற்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இரசாயன உர இறக்குமதிக்காக ஜனாதிபதி செயலகத்தால் எந்த வித உத்தரவும் வெளியிடப்படவில்லை. அவ்வாறு எந்த வித வர்த்தமானியும் வெளியிடப்படவில்லை.

மழையால் பாதிக்கப்பட்ட மரக்கறி செய்கைகளுக்காகக் கிருமி நாசிகனிகளையும் மற்றும் விசேட உரத்தையும் கொண்டு வருவதற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்குமாறு விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேறு எதனையும் கொண்டு வரத் தீர்மானிக்கப்படவில்லை" - என்றார். (இ)

# உண்மையான சூத்திரதாரிகளை காப்பாற்ற முயற்சிக்கின்றது அரசு

## மீண்டும் வாக்குமூலம் வழங்கிய பின் சிறில் காமினி அடிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் இருக்கும் உண்மையான சூத்திரதாரிகளைப் பாதுகாக்க அரசு முயற்சிக்கின்றது என சிறில் காமினி அடிகள் குற்றஞ்சாட்டினார்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் மீண்டும் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பந்தமான விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு வழங்கியுள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதை ஒதுக்கிவைத்து விட்டு, விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பது குறித்து கேள்வி எழுப்பும் நபர்களை அரசு பின் தொடர்ந்து வருகின்றது.



விசாரணைகளை ஒதுக்கி வைத்து விட்டு கேள்வி எழுப்பும் நபர்களைப் பின் தொடர்வதன் ஊடாக விசாரணைகளை மூடி மறைக்கும் முயற்சி மாத்திரமல்லாது, ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் இருக்கும் உண்மையான சூத்திரதாரிகளைப் பாதுகாக்க அரசு முயற்சிக்கின்றது.

இதனடிப்படையில், ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் தற்போதைய அரசுடன் சம்பந்தப்பட்ட நபர்களும் இருக்கின்றனரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்தச் சந்தேகம் எவருக்கும் எழக்கூடியது.

இப்படியான சந்தேகங்கள் ஏற்படுவதைப் பயமுறுத்தல்கள் மூலமோ, அச்சுறுத்தல்கள் மூலமோ நிறுத்திவிட முடியாது. அவ்வாறான சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க நியாயமான விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிறைவேற்றுவதற்காக கத்தோலிக்கத் திருச்சபை எடுக்கும் முயற்சிகளை எந்தவகையிலும் நிறுத்தப் போவதில்லை.

பயமுறுத்தல் அல்லது அச்சுறுத்தல்கள் மூலம் நீதியைத் தேடும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியும் என அரசின் பிரதானிகள் நினைத்தால் அது மிகப் பெரிய கேலி.

முன்னாள் சட்டமா அதிபர் கூட ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் மிகப் பெரிய சூழ்ச்சி இருக்கின்றது எனக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ளதை நம்ப நேரிடும்" - என்றார். (இ)

DAN CINE MARATHON

மாபெரும் குறும்படப் போட்டி

இது நமது திரைத்துறை கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்

உங்கள் அணியினருடன் போட்டியில் கலந்துகொள்ளத் தயாராகுங்கள்

Dan Cine Marathon குறும்படப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணிகள் இப்போதே உங்கள் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு :
075 313 2901, 075 313 2932, 076 921 3686

ஈழநாடு
Eelanadu

# ‘படகுப் பாதை’ விபத்து தொடர்பில் முறையான விசாரணை நடத்துக!

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

**கொழும்பு, நவ. 24**
**கிண்ணியாவில் இடம்பெற்ற ‘படகுப் பாதை’ விபத்து சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.**



இதேவேளை, இந்த விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி, நிமல் லன்சா அந்தப் பகுதியில் பாலத்தை அமைப்பதற்கான அடிக் கல்லை நாட்டிய போதும், அது தொடர்பான வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்திருந்தது என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், அங்கு மக்கள் பயணிப்பதற்கான படகுப் பாதை விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும், அந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அதேபோன்று குறித்த படகுப் பாதை இயங்கிய முறை மற்றும் அதன் சட்டபூர்வ தன்மை ஆகியன குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ சபையில் வலியுறுத்தினார். (இ)

# பெண்களை அவமதித்த குட்டியாராச்சிக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சபையில் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, நவ. 24

பெண்களை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் இரட்டை அர்த்தத்தில், ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி கீழ்த்தரமான வகையில் கருத்து வெளியிட்டுள்ளார் எனவும், இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரட்ண, சபாநாயகரிடம் முறையிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்னையை எழுப்பியே ரோஹினி குமாரி விஜயரட்ண, சபாநாயகரிடம் இவ்வாறு முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

அதன்போது ரோஹினி மேலும் கூறுகையில்,

”பாராளுமன்றத்தில் 20ஆம் திகதி திஸ்ஸ குட்டியாராச்சி ஆற்றிய உரையில், அபகீர்த்தி, வஞ்சித்தல் மற்றும் வக்கிரத்தனமான வகையில் சபையில் ஒருபோதும் பயன்படுத்தப்படாத வசனத்தை பயன்படுத்தியுள்ளார்.

முதலாவதாக அவர் நான் கூறாத வசனத்தையும் பொருளொன்றையும், அதன் விலையையும் கூறி மகிழ்ச்சியா என்று கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு நான் எந்தப் பொருளின் பெயரையும் அவ்வாறு குறிப்பிட்டிருக்கவில்லை. ஆனால், அவர் குறிப்பிட்ட பொருளின் பெயரை குறிப்பிட்டு இரட்டை அர்த்தத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். அந்த வசனத்தின் உள் அர்த்தத்தைப் பார்க்குமாறு நான் கேட்கின்றேன்.

இதேவேளை, இந்தச் சபையில் இல்லாத, இங்கு கூறும் கருத்துக்களுக்கு எந்தவகையிலும் தொடர்புபடாத ஜலனி பிரேமதாஸ தொடர்பிலும் குறிப்பிட்டு அவர் தொடர்பிலும் அவருக்கு அகௌரவப்படுத்தும் வகையில் கீழ்த்தரமான வசனத்தை திஸ்ஸ குட்டியாராச்சி பயன்படுத்தியுள்ளார்.

அவர் இந்தக் கருத்தைக் கூறும்போது, சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினருக்கு நளின் பண்டார எம்.பி. அவ்வாறான அநாகரிகமான வசனத்தை நீக்குமாறு சுட்டிக்காட்டியுள்ளதுடன், அதனை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறும் வலியுத்தியுள்ளார். ஆனால், அந்தக் கருத்துக்கள் தொடர்பில் அவர் புரிந்துகொள்வில்லை அப்படியாயின் அந்த ஆசனத்தில் இருந்த அஜித் ராஜபக்ஷவுக்கு அந்தக் கதிரையின் முக்கியத்துவம் கதிரை தொடர்பில் தெளிவு படுத்துமாறு நான் சபாநாயகரிடம் கேட்கின்றேன். என்றும் சொன்னார். (இ)

# கௌதாரிமுனை கடலில் ஆணின் சடலம் நேற்று மீட்பு

கிளிநொச்சி, நவ. 24

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனைக் கடலில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை, சடலம் ஒன்று மிதக்கின்றது எனப் பூநகரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டனர்.

சடலமாகக் காணப்பட்டவர் யாழ்ப்பாணம் - பாசையூரைச் சேர்ந்தவர் எனவும், அவர் அன்ரனிஷ் வீதியைச் சேர்ந்த 42 வயதுடைய டண்சன் கனிராஜ் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ - 03)

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 08 - 1933



இறப்பு 19 - 11 - 2021

## திருமதி சின்னதம்பி கனகம்மா

யாழ். நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சின்னதம்பி கனகம்மா அவர்கள் கடந்த (19.11.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா – செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகநாதர் – பொன்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும்,காலஞ்சென்ற நாகநாதர் சின்னதம்பி அவர்களின் ஆருயிர் மனைவியும், இந்திரா, வசந்தினி, இராகினி, காலஞ்சென்ற ஸ்ரீதரன் உமாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஷ்வரன், மனோகரன், பாலசுப்பிரமனியம், ராகவன், சியாமிளா ஆகியோரின் அன்பு மாமியாரும்,யோகநாதன் பாக்கியரத்தினம் அவர்களின் பாசமிகு சகோதரியும், அனித்தா, சஞ்சிவன், ராஜி, தீபன், கஷ்தூரி, தர்சன், அம்ஷாலினி, கீர்திகா, நிவேதிகா, அவினாஷ், ஆகாஷ், அக்ஷிகா, கௌதம், சுவேதா ஆகியோரின் அன்புப் பாட்டியும், ஆருஷன், ஆரிகா, ரோஷன், மைரா, கிரிஷ், கேஷிவ், ஸ்ரீஜா, விகாஷ்னி, விருஷிகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

**பார்வைக்கு**
Tuesday, 23 Nov 2021 6:00 PM - 9:00 PM
Wednesday, 24 Nov 2021 7:30 AM - 8:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை**
Wednesday, 24 Nov 2021 8:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**
Wednesday, 24 Nov 2021 10:00 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**ரமேஸ் - உறவினர்**
**Mobile : +16472997404**

தகவல்:
**குடும்பத்தினர்.**










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் : டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- ஆரம்பம்,இரும்புத்திரை திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ-மனித உரிமை செயற்பாட்டாளர் ஸ்ரீ அப்துல் தகூர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-வைத்திய கலாநிதி கதிர்காமநாதன்



9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு